# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1992/19 - 2016 නොවැම්බර් මස 08 වැනි අඟහරුවාදා - 2016.11.08

*1992/19 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 08 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம்***

பிரிவு 4(2) இன் படியான பிரசுரித்தல்

இலங்கை பட்டயக்கணக்கறிஞர் நிறுவகத்திற்கு (இதனகத்துப்பின்னர் 'நிறுவகம்' எனக்குறிப்பிடப்படும்) அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கைக் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்காக இத்துடன் பிரசுரிக்கப்பட்டுள்ள "இலங்கைக்கணக்கீட்டு நியமங்களுக்கான (SLFRS 2 பங்கு அடிப்படையிலான கொடுப்பனவுகள், SLFRS 15 வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம் மற்றும் SLFRS 4 காப்புறுதி ஒப்பந்தங்கள்) மாற்றங்களை' 01 சனவரி 2017 இல் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் வழங்கியுள்ளது. இந்தத் திருத்தங்கள் இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு சனவரி மாதம் முதலாவது நாளில் அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் காலப்பகுதிகளை அடக்கும் நிதிக்கூற்றுக்களுக்கு அமுலுக்கு வரும். முன்னதான பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

நிறுவகபேரவையான் கட்டளைப்படி,

அருணஅல்விஸ்,
செயலாளர்.

இலங்கைப் பட்டயக் கணக்கறிஞர் நிறுவகம்
இல. : 30 A,
மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07.
2016, நவெம்பர் 08.

## SLFRS நியமங்களுக்கான திருத்தங்கள் (SLFRS 2 *பங்கு அடிப்படையிலான கொடுப்பனவுகள்*, SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம்* மற்றும் SLFRS 4 *காப்புறுதி ஒப்பந்தங்கள்*) - 2018 ஜனவரி 01 முதல் நடைமுறைக்கு வரும்

SLFRS 2 *பங்கு அடிப்படையிலான கொடுப்பனவுகள்* நியமத்துக்கான திருத்தங்கள்
SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம்* நியமத்துக்கான திருத்தங்கள்
SLFRS 4 *காப்புறுதி ஒப்பந்தங்கள்* நியமத்துக்கான திருத்தங்கள்

## SLFRS 2 *பங்கு அடிப்படையிலான கொடுப்பனவுகள்* நியமத்துக்கான திருத்தங்கள்

பந்திகள் 19, 30–31, 33, 52 மற்றும் 63 ஆகியன திருத்தப்பட்டுள்ளதுடன், பந்திகள் 33A–33H, 59A–59B மற்றும் 63D ஆகியன சேர்க்கப்பட்டுள்ளன. பந்திகள் 33A மற்றும் 33E ஆகியவற்றுக்கு முன்பான தலைப்புக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. நீக்கப்பட்ட உரை குறுக்குக் கோடிட்டு வெட்டப்பட்டுள்ளதுடன் புதிய உரை கீழ்க் கோடிடப்பட்டுள்ளது. பந்திகள் 32 மற்றும் 34 ஆகியன திருத்தப்படாதபோதிலும் இலகுவான தொடர்புபடுத்தலுக்காக அவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

### ஒப்படைப்பு நிபந்தனைகளின் கையாள்கை

19 உரிமையாண்மைச் சாதனங்களின் வழங்கலானது குறிப்பிட்ட ஒப்படைப்பு நிபந்தனைகளை திருப்தி செய்வதற்கான நிபந்தனையுடன் கூடியதாக இருக்கலாம். உதாரணமாக, ஊழியர் ஒருவருக்கு பங்குகள் அல்லது பங்குத் தேர்வுரிமைகளை வழங்கலானது வழக்கமாக அந்த ஊழியர் குறிப்பிட்ட காலத்திற்கு உரிமத்தின் சேவையில் தொடர்ந்து இருக்கவேண்டுமெனும் நிபந்தனையை திருப்திசெய்ய வேண்டியதாக இருக்கக்கூடும். உரிமம் அதன் இலாபத்தில் ஒரு குறிப்பிட்ட வளர்ச்சியை அல்லது உரிமத்தின் பங்கு விலையில் குறிப்பிட்ட அதிகரிப்பினை அடைதல் போன்ற திருப்தி செய்யப்படவேண்டிய செயற்பாட்டு நிபந்தனைகளும் இருக்கக்கூடும். அளவீட்டுத் திகதியில் பங்குகள் அல்லது பங்குத் தேர்வுரிமைகளின் சீர்மதிப்பினை மதிப்பிடும் போது சந்தைப் புறநிலைகள் தவிர்ந்த ஒப்படைப்பு நிபந்தனைகள் கணக்கிற் கொள்ளப்படமாட்டாது. அதற்குப் பதிலாக, இறுதியில் வழங்கப்படும் உரிமையாண்மைச் சாதனங்களின் பதிலிறுக்கையாக பெறப்படும் பொருட்கள் அல்லது சேவைகளின் தொகையானது இறுதியாக ஒப்படைக்கப்படும் உரிமையாண்மைச் சாதனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஏற்பிசைவு செய்யப்படும் வகையில், ஊடுசெயற் தொகையின் அளவீட்டில் உள்ளடக்கப்படும். உரிமையாண்மைச் சாதனங்களின் எண்ணிக்கையினை செம்மை செய்வதன் மூலம் <u>சந்தை நிலைமைகள் தவிர்ந்த</u> ஒப்படைப்பு நிபந்தனைகள் கணக்கிற் கொள்ளப்படும். எனவே, திரளும் அடிப்படையில், <u>சந்தை நிலைமைகள் தவிர்ந்த</u> ஒப்படைப்பு நிபந்தனைகளை திருப்தி செய்யாத காரணத்தினால் வழங்கப்படும் உரிமையாண்மைச் சாதனங்கள் ஒப்படைக்கப்படாவிடின், பெறப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்காக எந்தத் தொகையும் ஏற்பிசைவு செய்யப்படமாட்டாது. உதாரணமாக, பந்தி 21 இன் தேவைப்பாடுகளுக்கு அமைவாக, குறிப்பிட்ட சேவைக்காலத்தினை பதிற்தரப்பினர் பூரணப்படுத்தத் தவறும் பட்சத்தில் அல்லது சாதனை நிபந்தனை திருப்திப்படுத்தப்படாத பட்சத்தில். ............

### பணம் மூலம் செலுத்தப்படும் பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு ஊடுசெயல்கள்

**30 பணம் மூலம் செலுத்தப்படும் ஒவ்வொரு பங்கு அடிப்படைக் கொடுப்பனவு ஊடுசெயல்களுக்கும் உரிமம் <u>பந்திகள் 31–33D இன் தேவைப்பாடுகளுக்கு அமைவாக</u> சுவீகரிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள் மற்றும் ஏற்படுத்திய பரிப்பின் பெறுமதியை சீர்மதிப்பில் அளவிடுதல் வேண்டும். பரிப்பானது தீர்க்கப்படும் வரை, உரிமம் ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின்**

**முடிவிலும் தீர்ப்பனவுத் திகதியிலும் குறித்த காலங்களுக்கான இலாப நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்பட்ட சீர்மதிப்பிலான மாற்றங்களுடன் பரிப்பின் சீர்மதிப்பினை மீள அளவீடு செய்யும்.**

31 உதாரணமாக, உரிமம் ஊழியர்களின் சம்பளத்தின் ஒருபகுதியாக பங்குப் பெறுமதியில் அதிகரிப்பு உரிமைகளை ஊழியர்களுக்கு வழங்க, அதன் காரணமாக ஊழியர்கள் குறித்த காலப்பகுதியில் குறிப்பிட்ட மட்டத்திற்கு மேலாக உரிமத்தின் பங்குவிலையில் அதிகரிப்பு அடிப்படையில், எதிர்கால காசுக் கொடுப்பனவுக்கு (உரிமையாண்மைச் சாதனத்திலும் பார்க்க) உரித்துடையவர் ஆகின்றனர். ~~அல்லது~~ மாறாக உரிமம் அதன் ஊழியர்களுக்கு கட்டாயமாகவோ (உதாரணமாக வேலையை விட்டு விலகும்போது) அல்லது ஊழியர்களின் விருப்பத் தெரிவின் அடிப்படையிலோ மீட்கத்தக்க) பங்குகளுக்கான உரித்தினை வழங்குதல் மூலம் எதிர்கால பணக்கொடுப்பனவுக்கான உரிமையை (பங்குத் தெரிவினைப் பயன்படுத்தும்போது பங்குகளை வழங்குவது அடங்கலாக) வழங்கலாம். இந்த ஏற்பாடுகள் பணம் மூலம் செலுத்தப்படும் பங்கு அடிப்படையிலான ஊடுசெயல்களுக்கான உதாரணங்கள் ஆகும். பங்கு விலை உயர்வு உரிமைகள் பந்திகள் 32–33D இல் காணப்படும் சில தேவைப்பாடுகளை விளக்குவதற்காகப் பயன்படுத்தப்படும். எனினும் அந்த பந்திகளில் காணப்படும் தேவைப்பாடுகள் அனைத்தும் பணம் மூலம் செலுத்தப்படும் பங்கு அடிப்படையிலான செயல்களுக்கும் பிரயோகிக்கத் தக்கவையாகும்.

32 ஊழியர்கள் சேவையை வழங்குவதன் காரணமாக, உரிமமானது பெறப்பட்ட சேவைகளுக்காகவும் அந்தச் சேவைகளுக்காக செலுத்தவேண்டிய பரிப்பு ஒன்றையும் ஏற்பிசைவு செய்யும். உதாரணமாக பங்கு விலையில் உயர்வுக்கான உரிமைகளுக்கு உடனடியாகவே பரிப்பு வைக்கப்பட ஊழியர்கள் அத்தகைய பணத்துக்காக குறிப்பிட்ட காலம் தமது சேவையை நிறைவு செய்தல் வேண்டும் என்பது அவசியமில்லை. இதற்கு முரணான வகையில் ஏதேனும் சான்றுகள் இல்லாதவிடத்து உரிமம் அவ்வாறு பங்கு விலை உயர்வு உரிமைகளுக்கு மாற்றாக ஊழியர்களால் வழங்கப்பட்ட சேவை பெறப்பட்டதாகவே கருதுதல் வேண்டும். ஆகையால் உரிமம் பெறப்பட்ட சேவைகளையும் அந்தச் சேவைகளுக்காக கொடுப்பனவு செய்யவேண்டிய ஒரு பரிப்பையும் ஏற்பிசைவு செய்யும். ஊழியர்கள் ஒரு குறிப்பிட்ட கால அளவு சேவையைப் பூர்த்தி செய்யும்வரை அத்தகைய பங்கு விலை உயர்வு உரிமைகள் அவர்களுக்கு கிடைக்காது எனின், ஊழியர்கள் குறிப்பிட்ட கால அளவு சேவையை நிறைவு செய்த பின்னரே அவர்களிடம் இருந்து பெறப்பட்ட சேவை மற்றும் அவற்றுக்காக செலுத்தவேண்டிய கொடுப்பனவுக்கான பரிப்பு ஆகியவற்றை உரிமம் ஏற்பிசைவு செய்யும்.

33 பரிப்பானது அது தீர்க்கப்படும் வரை ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவிலும், பங்கு விலை உயர்வு உரிமைகளின் சீர்மதிப்பில், ஒரு தெரிவுரிமை விலையிடல் முறைமையைப் பயன்படுத்தி, பங்கு விலை உயர்வு உரிமை வழங்கப்பட்ட நிபந்தனைகளை கருத்தில் எடுத்து, இதுநாள் வரை ஊழியர்கள் வழங்கிய சேவையின் காலப்பகுதிக்கு அமைவாக, பந்திகள் 33A–33D இல் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணக்கமான முறையில் உரிமம் அதற்கான ஆரம்ப அளவீட்டை மேற்கொள்ளும். உரிமம் காசு மூலமாக தீர்க்கப்படும் பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு வழங்கும் நிபந்தனைகளை மாற்றம் செய்யக்கூடும். பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு ஊடுசெயல் ஒன்றில் பணம் மூலமாக தீர்க்கப்படுவதில் இருந்து உரிமையாண்மை மூலமாக தீர்க்கப்படும் முறைக்கு அதன் வகைப்படுத்தலில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கான வழிகாட்டல் பின்னிணைப்பு B இன் பந்திகள் B44A–B44C இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

## பொறுப்பு ஒப்படைப்பு மற்றும் பொறுப்பு ஒப்படைப்பு அல்லாத நிபந்தனைகளின் கையாள்கை

33A காசு மூலம் தீர்க்கப்படும் பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு ஊடுசெயலானது குறித்த சில பொறுப்பு ஒப்படைப்பு நிபந்தனைகளை நிறைவு செய்யும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகக் காணப்படலாம். அங்கு உரிமம் குறிப்பிட்ட வளர்ச்சியினை அடைதல் அல்லது உரிமத்தின் பங்குகளின் விலையில் ஒரு குறிப்பிட்ட அதிகரிப்பு முதலிய திருப்தி செய்யப்பட வேண்டிய செயல் நிறைவேற்ற நிபந்தனைகள் காணப்படலாம். சந்தை நிலைமைகள் தவிர்ந்த பொறுப்பு ஒப்படைப்பு நிபந்தனைகள் அளவீட்டுத் திகதியில் காசு மூலமாக தீர்க்கப்படும் பங்கு அடிப்படையிலான

கொடுப்பனவுகளின் சீர்மதிப்பை மதிப்பிடும் போது கருத்தில் எடுக்கப்படுதல் வேண்டும். அதற்குப்பதிலாக, சந்தை நிலைமைகள் தவிர்ந்த, பொறுப்பை ஒப்படைக்கும் நிபந்தனைகள் ஒரு ஊடுசெயலில் இருந்து உருவாகும் பரிப்பின் மதிப்பீட்டில் உள்ளடக்கப்படும் விருதுகளின் எண்ணிக்கையை சீராக்குவதன் மூலம் கணக்கில் எடுக்கப்படலாம்.

33B பந்தி 33A இல் கூறப்பட்ட தகவல்களை பிரயோகிப்பதற்காக, பொறுப்பை ஒப்படைக்கும் காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் தொகையை உரிமம் ஏற்பிசைவு செய்யும். அத்தகைய தொகையானது பொறுப்பு ஒப்படைக்கப்பட எதிர்பார்க்கப்பட்ட ஒப்படைப்புகளின் எண்ணிக்கையின் கிடைக்கத்தக்கதான மிகச்சிறந்த மதிப்பினை அடிப்படையாகக் கொண்டிருக்கும். எதிர்பார்க்கப்படும் ஒப்படைப்புக்களின் எண்ணிக்கையானது முன்னைய மதிப்பீட்டிலிருந்து வேறுபடுவதாக பிற்காலத் தகவல்கள் காட்டினால், தேவைப்படுமிடத்து உரிமம் மதிப்பீட்டினை மீளாய்வு செய்யும். பொறுப்பு ஒப்படைக்கப்படும் திகதியில் உரிமம் இறுதியாக பொறுப்பு ஒப்படைக்கப்படும் ஒப்படைப்புக்களின் எண்ணிக்கைக்கு சமமான வகையில் மதிப்பீட்டை மீளாய்வு செய்யும்.

33C வழங்கப்படும் காசு மூலம் தீர்க்கப்படும் பங்கு அடிப்படையிலான கொடுப்பனவுகளின் சீர்மதிப்பை அளவிடும் போது ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவிலும் சீர்மதிப்பை அளவிடும் போதும் தீர்ப்பனவுத் திகதியின் போதும் பொறுப்பு ஒப்படைத்தல் நிபந்தனையாக்கப்பட்ட இலக்கு பங்கு விலை நிலைமைகள் அத்துடன் பொறுப்பு ஒப்படைத்தல் சாராத நிபந்தனைகள் கருத்தில் எடுக்கப்படும்.

33D பந்திகள் 30–33C இனைப் பிரயோகிப்பதன் விளைவாக, காசு மூலம் தீர்க்கப்படும் பங்கு அடிப்படையிலான கொடுப்பனவுகளின் திரண்ட தொகையானது இறுதியாக, செலுத்தப்பட்ட காசுக்கு சமமானதாகக் காணப்படும்.

## பிடித்துவைத்த வரிக் கடப்பாடுகளின் நிகர தீர்ப்பனவுடனான பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு ஊடுசெயல்கள்

33E வரிச் சட்டங்கள் அல்லது விதிமுறைகள் பங்கு அடிப்படைக் கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய ஊழியருடைய வரிப் பொறுப்பைக் கழித்து, அந்தப் பணத்தை பொதுவாகப் பணவடிவில், ஊழியரின் சார்பில் வரி அதிகாரசபைக்கு அனுப்புமாறு உரிமத்தைத் தேவைப்படுத்தலாம். இந்தக் கடமையை நிறைவேற்றுவதற்காக, பங்கு அடிப்படைக் கொடுப்பனவு ஏற்பாட்டின் விதிமுறைகள் வழங்கப்படும் சாதனங்களின் மொத்த எண்ணிக்கையில் இருந்து ஊழியரின் வரிப்பொறுப்புக்கு சமமான சாதனங்களின் எண்ணிக்கையை பிடித்துவைக்க அனுமதிக்கலாம் அல்லது தேவைப்படுத்தலாம் (அதாவது பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு ஏற்பாடு ஒரு நிகர தீர்ப்பனவு அம்சத்தைக் கொண்டிருத்தல்.)

33F பந்தி 34 இல் காணப்படும் தேவைப்பாடுகளுக்கான ஒரு விதிவிலக்கானது பந்தி 33E இல் விபரிக்கப்பட்ட ஊடுசெயலானது நிகர தீர்ப்பனவு அம்சத்தைக் கொண்டிராமை காரணமாக, உரிமையாண்மை மூலம் தீர்க்கப்படும் பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு ஊடுசெயல் என வகைப்படுத்தப்பட வேண்டுமாயின், அது அவ்வாறே வகைப்படுத்தப்பட வேண்டும்.

33G பங்கு அடிப்படைக் கொடுப்பனவு ஊடுசெயல்கள் தொடர்பான ஊழியர்களின் வரிப் பொறுப்பைத் தீர்ப்பதற்காக வரி அதிகாரசபைக்கு செலுத்தும் நிதிக்காக பங்குகளை பிடித்து வைக்கும் உரிமம் இந்த நியமத்தின் பந்தி 29 இனைப் பயன்படுத்திய பங்குகளின் நிறுத்தி வைத்தலுக்குக் கணக்கு வைக்கும். ஆகவே, கொடுப்பனவானது, பிடித்து வைக்கப்பட்ட உரிமையாண்மை சாதனங்களின் நிகர தீர்ப்பனவுத் திகதியில் கொடுப்பனவானது சீர்மதிப்பை விட அதிகமானதாக இருக்கும் அளவு தவிர்ந்த வகையில், நிறுத்தி வைக்கப்பட்ட பங்குகளுக்காக உரிமையாண்மையில் இருந்தான ஒரு கழிப்பனவாகக் கணக்கு வைக்கப்படும்.

33H பந்தி 33F இல் காணப்படும் விலக்களிப்பானது பின்வரும் சந்தர்ப்பங்களுக்குப் பிரயோகிக்கத்தக்கது அல்ல:

(a) பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு ஊடுசெயல் தொடர்பான ஊழியரது வரிப்பொறுப்பு தொடர்பில் சட்டங்கள் அல்லது விதிமுறைகளுக்கு அமைவாக ஏதேனும் தொகைகளை உரிமம் நிறுத்தி வைக்கும் கடப்பாட்டைக் கொண்டிராத, நிகர தீர்ப்பனவு அம்சத்துடன் கூடிய பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு ஊடுசெயல் ஏற்பாடு

(b) பங்கு அடிப்படைக் கொடுப்பனவு ஊடுசெயல் தொடர்பான ஊழியரது வரிப்பொறுப்புக்கு மேலதிகமாக உரிமம் பிடித்து வைத்திருக்கும் ஏதேனும் உரிமையாண்மை சாதனங்கள் (அதாவது, ஊழியரது வரிப்பொறுப்பு தொடர்பான பணப்பெறுமதிக்குக் கூடுதலான பெறுமதியிலான பங்குகளை உரிமம் பிடித்துவைத்திருத்தல்). அவ்வாறு மிகையாக பிடித்து வைத்த பங்குகளுக்காக ஊழியர்களுக்கு காசாக (அல்லது ஏனைய சொத்துக்களாக) செலுத்தி தீர்க்கப்படும்போது அது காசாகத் தீர்க்கப்படும் பங்கு அடிப்படையிலான கொடுப்பனவாகக் கணக்கு வைக்கப்படும்.

**34 ஏற்பாட்டின் கட்டுறுப்புக்கள் உரிமத்திற்கோ அல்லது பதிற்தரப்பினருக்கோ உரிமம் காசுக் கொடுப்பனவின் மூலமாகவோ (அல்லது பிறசொத்துக்களினால்) அல்லது உரிமையாண்மைச் சாதனங்களை வழங்குவதன் மூலமோ ஊடுசெயலினை தீர்க்கவேண்டும் என்ற தேர்வினை தீர்மானிக்கும் உரிமையினை வழங்கும் பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு ஊடுசெயல்களைப் பொறுத்தமட்டில், உரிமமானது அந்த ஊடுசெயலினை அல்லது அந்த ஊடுசெயலின் கூறுகளை, உரிமம் காசு அல்லது பிற சொத்துக்களின் மூலம் தீர்ப்பனவு செய்வதன் அடிப்படையில் பரிப்பினை ஏற்படுத்தியிருந்தால் அந்த அளவிற்கு காசு மூலம் தீர்க்கப்படும் பங்கு அடிப்படைக் கொடுப்பனவு ஊடுசெயலொன்றாகவோ, அல்லது அவ்வாறான பரிப்பு ஏற்படுத்தப்படாதவிடத்து அந்த அளவிற்கு உரிமையாண்மை மூலம் தீர்க்கப்படும் பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு ஊடுசெயலொன்றாகவோ, கணக்கிற் கொள்ளும்.**

## வெளிக்காட்டல்

…

52 இந்த SLFRS நியமத்தில் வெளிக்காட்டப்பட வேண்டுமென தேவைப்படுத்திய தகவல்கள் பந்திகள் 44, 46 மற்றும் 50 களில் குறிப்பிட்ட கோட்பாடுகளை பூர்த்தி செய்யாத பட்சத்தில், அவற்றினை திருப்தி செய்வதற்கு அவசியமான மேலதிக தகவல்களை உரிமம் வெளிக்காட்டும். உதாரணமாக, பங்குஅடிப்படை கொடுப்பனவு ஊடுசெயல்களை பந்தி 33F க்கு அமைய உரிமையாண்மை மூலம் தீர்க்கப்படுவதாக உரிமம் வகைப்படுத்தியிருப்பின், பயனாளர்களுக்கு பங்கு அடிப்படைக் கொடுப்பனவு ஏற்பாடுகளுடன் தொடர்புபட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல் விளைவுகள் பற்றி அறிவிக்க வேண்டிய அவசியம் காணப்படின், உரிமம் ஊழியரது வரிப் பொறுப்பைத் தீர்ப்பதற்கு வரி அதிகாரசபைக்கு செலுத்த எதிர்பார்க்கும் தொகைதொடர்பான மதிப்பீடு ஒன்றை வெளிப்படுத்த வேண்டும்.

## இடைக்கால ஏற்பாடுகள்

…

59A உரிமம் பந்திகள் 30–31, 33–33H மற்றும் B44A–B44C இல் உள்ள திருத்தங்களை கீழே குறிப்பிட்டவாறு பிரயோகிக்கும். முன்னைய காலங்கள் மீள்கூற்று செய்யப்படாது.

(a) பந்திகள் B44A–B44C இல் உள்ள திருத்தங்கள் முதன்முதலில் உரிமம் இந்தத் திருத்தங்களைப் பிரயோகித்த திகதியில் அல்லது அதற்குப் பின்னர் இடம்பெறும் மாற்றங்களுக்காக பிரயோகிக்கப்படும்.

(b) பந்திகள் 30–31 மற்றும் 33–33D இல் உள்ள திருத்தங்கள் முதன் முதலில் உரிமம் இந்த திருத்தங்களைப் பிரயோகித்த திகதியில் பொறுப்பு ஒப்படைக்கப்படாத பங்கு அடிப்படைக் கொடுப்பனவு ஊடுசெயல்களுக்கும் மற்றும் முதன்முதலில் உரிமம் இத் திருத்தங்களைப் பிரயோகித்த திகதியில் அல்லது அதற்குப் பின்னரான கொடை ஒன்றுடன் கூடிய பங்கு அடிப்படைக் கொடுப்பனவு ஊடுசெயல்களுக்கும் பிரயோகிக்கப்படும். முதன்முதலில் உரிமம் இத் திருத்தங்களைப் பிரயோகித்த திகதிக்கு முன்னரான கொடை ஒன்றுடன் கூடிய பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு ஊடுசெயல்களுக்கு உரிமம் அத் திகதியில் பரிப்பினை மீள் அளவீடு செய்து மீள் அளவீட்டின் விளைவினை, முதன் முதலில் உரிமம் இத்திருத்தங்களை பிரயோகித்த அறிக்கையிடல் காலத்தின் ஆரம்ப கைக்கொள் இலாபத்துடன் (அல்லது உரிமையாண்மையின் கூறுகளுடன், பொருத்தமான வகையில்) சீராக்கும்.

(c) பந்திகள் 33E–33H இல் உள்ள திருத்தங்கள் மற்றும் பந்தி 52 இல் உள்ள திருத்தங்கள் முதன்முதலில் உரிமம் இத் திருத்தங்களைப் பிரயோகித்த திகதியில் பொறுப்பு ஒப்படைக்கப்படாத (அல்லது பொறுப்பு ஒப்படைக்கப்பட்டும் பயன்படுத்தப்படாத) பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு ஊடுசெயல்கள் மற்றும் முதன் முதலில் உரிமம் இத் திருத்தங்களைப் பிரயோகித்த திகதியில் அல்லது அதற்குப் பின்னர் கொடை ஒன்றுடன் கூடிய பங்கு அடிப்படைக் கொடுப்பனவு ஊடுசெயல்களுக்கு பிரயோகிக்கும். முன்னர் காசுமூலம் தீர்க்கப்படுவதாக வகைப்படுத்தப்பட்டு, ஆனால் தற்போது திருத்தங்களுக்கு அமைவாக உரிமையாண்மை மூலம் செலுத்தப்படுவதாக வகை மாற்றப்பட்ட பொறுப்பு ஒப்படைக்கப்படாத (அல்லது பொறுப்பு ஒப்படைக்கப்பட்டும் பயன்படுத்தப்படாத) பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு ஊடுசெயல்களுக்கு (அல்லது அவற்றின் கூறுகளுக்கு), உரிமம் பங்கு அடிப்படைக் கொடுப்பனவுப் பரிப்பின் முன்கொண்டு செல்லும் பெறுமதியை முதன்முதலில் உரிமம் இத்திருத்தங்களைப் பிரயோகித்த திகதியில் உரிமையாண்மைக்கு மீளவகைப்படுத்தும்.

59B பந்தி 59A இன் தேவைப்பாடுகளைக் கருத்தில் கொள்ளாது, உரிமம் பந்தி 63D இல் உள்ள திருத்தங்களை, இந் நியமத்தின் பந்திகள் 53-59 இல் விபரிக்கப்பட்ட இடைக்கால ஏற்பாடுகளுக்கு அமைவாக LKAS 8 *கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் மாற்றங்கள் மற்றும் வழுக்கள்* நியமத்துக்கு அமைய, சாத்தியமெனில் மாத்திரம், மீள்கூற்றுக்களின்றி, முன்பிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் பிரயோகிக்கும். உரிமம் முன்பிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் பிரயோகத்தை தெரிவுசெய்தால், அது அனைத்து *பங்குஅடிப்படைக் கொடுப்பனவு ஊடுசெயல்களின் விளக்கவுரை மற்றும் அளவீட்டு மாற்றங்களுக்கும்* (SLFRS 2 நியமத்துக்கான திருத்தங்கள்) அவ்வாறே செய்தல் வேண்டும்.

## நடைமுறைக்கு வரும் திகதி

…

**63 [நீக்கப்பட்டுள்ளது]**

63D 2016 செத்தெம்பரில் வழங்கப்பட்ட *பங்கு அடிப்படையிலான கொடுப்பனவு ஊடுசெயல்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவீட்டு* (SLFRS 2 நியமத்துக்கான திருத்தங்கள்) பந்திகள் 19, 30–31, 33, 52 மற்றும் 63 இனை திருத்தியும், பந்திகள் 33A–33H, 59A– 59B, 63D மற்றும் B44A–B44C இனை சேர்த்தும் அவை தொடர்பான தலைப்புக்களை திருத்தியும் உள்ளது. உரிமம் இந்தத் திருத்தங்களை 01 சனவரி 2018 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் ஆண்டுக் காலப் பகுதிகளுக்குப் பிரயோகிக்கும். முன்னைய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் இத் திருத்தங்களை முன்னைய காலப்பகுதிகளுக்குப் பிரயோகிப்பின், அந்த உண்மையை வெளிப்படுத்தும்.

பின்னிணைப்பு B இல் பந்திகள் B44A–B44C ஆகியன மற்றும் அவற்றுக்கான தலைப்புக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. புதிய உரை அடிக் கோடிடப்பட்டுள்ளது.

**வகைப்படுத்தலை காசுமூலம் செலுத்துவதில் இருந்து உரிமையாண்மை மூலம் தீர்க்கும் முறைக்கு மாற்றும் பங்கு அடிப்படையிலான ஊடுசெயல் மாற்றத்துக்கான கணக்கீடு**

B44A காசு மூலம் தீர்க்கப்படும் பங்கு அடிப்படைக் கொடுப்பனவு ஊடுசெயலின் நிபந்தனைகள், அது உரிமையாண்மை மூலம் தீர்க்கப்படும் பங்கு அடிப்படைக் கொடுப்பனவு ஊடுசெயலாக மாற்ற மடையும் வகையில் மாற்றம் செய்யப்பட்டால், அதன் விளைவாக அத்தகைய ஊடுசெயல் மாற்றம் ஏற்பட்ட திகதியில் இருந்து பின்வருமாறு கணக்கில் கொள்ளப்படும். குறிப்பாக;

(a) உரிமையாண்மை மூலம் தீர்க்கப்படும் பங்கு அடிப்படைக் கொடுப்பனவு ஊடுசெயலானது மாற்றத் திகதியில் வழங்கப்படும் உரிமையாண்மை சாதனங்களின் சீர்மதிப்பு அடிப்படையில் அளவிடப்படும். உரிமையாண்மை மூலம் தீர்க்கப்படும் பங்கு அடிப்படைக் கொடுப்பனவானது மாற்றத்தை உரிமையாண்மையில் பொருட்கள் அல்லது சேவைகளைப் பெற்றுக்கொண்ட அளவிற்கு ஏற்பிசைவு செய்யப்படும்.

(b) காசுமூலம் தீர்க்கப்படும் பங்கு அடிப்படைக் கொடுப்பனவு ஊடுசெயல்களுக்கான பரிப்பானது, மாற்றத் திகதி அன்றே ஏற்பிசைவு விலக்கப்படும்.

(c) ஏற்பிசைவு விலக்கிய பரிப்பின் முன்கொண்டு செல்லும் பெறுமதி மற்றும் மாற்றத் திகதியில் ஏற்பிசைவு செய்யப்பட்ட உரிமையாண்மையின் தொகை ஆகியவற்றுக்கு இடையிலான வேறுபாடு உடனடியாகவே இலாப நட்டங்களில் ஏற்பிசைவு செய்யப்படும்.

B44B மாற்றத்தின் விளைவாக, பொறுப்பு ஒப்படைக்கப்படும் காலப்பகுதி நீடிக்கப்பட்டாலோ அல்லது குறைக்கப்பட்டாலோ, பந்தி B44A இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டின் பிரயோகமானது பொறுப்பு ஒப்படைப்பு காலப்பகுதியில் ஏற்படும் மாற்றத்தை பிரதிபலிக்கும். மாற்றமானது பொறுப்பை ஒப்படைக்கும் காலப்பகுதிக்கு பின்னர் இடம்பெற்று இருப்பினும் கூட பந்தி B44A இன் தேவைப்பாடானது பிரயோகிக்கப்படும்.

B44C காசுமூலம் தீர்க்கப்படும் பங்குஅடிப்படைக் கொடுப்பனவு ஊடுசெயலானது இரத்து செய்யப்படலாம் (பொறுப்பு ஒப்படைத்தல் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாத போது, அதன் காரணமாக இரத்துச் செய்யப்படும் ஊடுசெயல்கள் தவிர) அல்லது தீர்க்கப்படலாம். உரிமையாண்மை சாதனங்கள் வழங்கப்பட்டு, அவ்வாறு வழங்கப்பட்ட திகதியில், அந்த உரிமையாண்மை சாதனங்களை இரத்துச் செய்யப்பட்ட பங்கு அடிப்படையிலான கொடுப்பனவுகளுக்கான பதிலீடாக உரிமம் அடையாளம் கண்டு கொண்டால், உரிமம் பந்திகள் B44A மற்றும் B44B இனைப் பிரயோகிக்கும்.

## SLFRS 4 *காப்புறுதி ஒப்பந்தங்கள்* நியமத்துக்கான திருத்தங்கள்

பந்தி 3 திருத்தப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட உரை குறுக்குக்கோடிட்டும் புதிய உரை கீழ்க்கோடிட்டும் காட்டப் பட்டுள்ளது.

### நோக்கெல்லை

…

3 இந்த SLFRS நியமம், கீழ்வருவன தவிர்ந்த, காப்புறுதியாளர் கொண்டுள்ள நிதிச்சொத்துக்கள் மற்றும் காப்புறுதியாளரால் வழங்கப்பட்ட நிதிப் பரிப்புக்கள் (LKAS 32 நிதிச் சாதனங்கள்: முன்னிலைப்படுத்தல், SLFRS 7 மற்றும் SLFRS 9 நிதிச் சாதனங்கள்) போன்ற காப்புறுதியாளர்களது ஏனைய கணக்கீட்டு விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தவில்லை:

(a) பந்தி 20A ஆனது நியமத்தில் இருந்து தற்காலிக விலக்களிப்புப் பெறுவதற்கான விசேட மூலப்பிரமாணங்களைப் பூர்த்தி செய்த காப்புறுதியாளர்களை அனுமதிக்கிறது,

(b) பந்தி 35B ஆனது விசேடவகையான அனுமதிக்கப்பட்ட நிதிச் சொத்துக்களுக்கு இடைத்தொடர்பு அணுகுமுறையைப் பயன்படுத்த காப்புறுதியாளர்களை அனுமதிக்கிறது.

(c) பந்தி 45 இல் ~~விபரிக்கப்பட்டுள்ள இடைக்கால ஏற்பாடானது,~~ குறிப்பிட்ட நிலைமைகளில் தமது சில அல்லது அனைத்து நிதிச் சொத்துக்களையும் இவை இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடத்தக்க வகையில் மீள வகைப்படுத்தலை அனுமதிக்கிறது.

…

| பந்தி 5 திருத்தப்பட்டுள்ளது. புதிய உரை கீழ்க்கோடிட்டும் காட்டப்பட்டுள்ளது. |
|---|

...............

5 உசாத்துணைக்கு இலகுவாக, உரிமம் சட்ட அல்லது மேற்பார்வைத் தேவைகளுக்காக காப்புறுதி வழங்குனராக கொள்ளப்படுவாரா என்பதனைக் கருத்தில் கொள்ளாது, காப்புறுதி ஒப்பந்தத்தினை வழங்கும் எந்த ஒரு உரிமத்தினையும் காப்புறுதியாளராக இந்த SLFRS விபரிக்கின்றது. பந்திகள் 3(a)–3(b), 20A-20Q, 35B-35N, 39B-39M மற்றும் 46-49 இல் உள்ள காப்புறுதியாளர் ஒருவருக்கான அனைத்துக் குறிப்பீடுகளும் சுயவிருப்பு பங்குபற்றல் அம்சத்தைக் கொண்ட நிதிச் சாதனங்கள் வழங்குனரையும் சேர்த்துக் குறிப்பதாக வாசிக்கப்படும்.

…

| பந்திகள் 20, 20K மற்றும் 20N இன் கீழ் புதிய தலைப்புக்கள் சேர்க்கப்பட்டுள்ளன. 20A –20Q ஆகிய புதிய பந்திகள் சேர்க்கப்பட்டுள்ளன. |
|---|

## ஏற்பிசைவு மற்றும் அளவீடு

…

### SLFRS 9 நியமத்திலிருந்து தற்காலிக விலக்களிப்பு

**20A SLFRS 9 நியமமானது நிதிச் சாதனங்களுக்கான கணக்கீட்டுக்கு வழிகாட்டுவதுடன், 01 ஜனவரி 2018 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் ஆண்டுக்கால பகுதிகளுக்கு நடைமுறைக்கு வரும். எனினும் பந்தி 20B யில் குறிப்பிடப்பட்டுள்ள தெரிவுப் பிரமாணங்களை திருப்தி செய்கின்ற காப்புறுதியாளருக்கு இந்த SLFRS நியமமானது, அந்த காப்புறுதியாளர் SLFRS 9 நியமத்துக்குப் பதிலாக, LKAS 39 நிதி சாதனங்கள்: ஏற்பிசைவு மற்றும் அளவீடு நியமத்தை 01 ஜனவரி 2021 க்கு முன்னர் ஆரம்பிக்கும் ஆண்டுகாலப் பகுதிகளுக்குப் பயன்படுத்துவதனை அனுமதிக்கிறது ஆனால் தேவைப்படுத்தவில்லை. SLFRS 9 நியமத்திலிருந்தான இந்த விலக்களிப்பினைப் பிரயோகிக்கும் காப்புறுதியாளர்கள்:**

**(a) இந்த நியமத்தின் பந்திகள் 39B–39J இல் தேவைப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல்களை வழங்குவதற்கு அவசியமான SLFRS 9 நியமத்தினுடைய தேவைப்பாடுகளைப் பயன்படுத்துவர், மற்றும்**

**(b) இந்த நியமத்தின் பந்திகள் 20A–20Q, 39B–39J மற்றும் 46–47 இல் விபரிக்கப்பட்டவை தவிர்ந்த, நிதி சாதனங்களுக்கு பொருத்தமான எல்லா நியமங்களையும் பயன்படுத்துவர்.**

**20B காப்புறுதியாளர் ஒருவர் SLFRS 9 நியமத்தின் தற்காலிக விலக்களிப்புகளை பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டு இருந்தால் மாத்திரமே பிரயோகிப்பார்.**

**(a) SLFRS 9 நியமத்தின் பந்திகள் 5.7.1(c), 5.7.7–5.7.9, 7.2.14 மற்றும் B5.7.5–B5.7.20 இல் குறிப்பிடப்பட்ட இலாபநட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடுமாறு குறித்து ஒதுக்கப்பட்ட நிதிசார் பரிப்பு ஒன்றின் நயங்கள் அல்லது நட்டங்களை முன்னிலைப்படுத்துவதற்கான**

**தேவைப்பாடு தவிர்ந்த SLFRS 9 நியமத்தின் எந்த வடிவங்களையும் அது முன்னர் பிரயோகித்திருக்காமை**

**(b) பந்தி 20D இல் குறிப்பிட்டவாறு அதன் 01 ஏப்பிறல் 2016 க்கு உடன் முந்திய வருடாந்த அறிக்கையிடல் திகதியின் அல்லது பந்தி 20D இல் குறிப்பிட்டவாறு ஒரு பிற்கால வருடாந்த அறிக்கையிடல் திகதியில் அதன் செயற்பாடுகள் காப்புறுதியுடன் நெருக்கமாக தொடர்புபட்டிருத்தல்.**

20C SLFRS 9 நியமத்தின் தற்காலிக விலக்களிப்புக்களை பிரயோகிக்கும் காப்புறுதியாளர் ஒருவர் SLFRS 9 நியமத்தின் பந்திகள் 5.7.1(c), 5.7.7–5.7.9, 7.2.14 மற்றும் B5.7.5–B5.7.20 இல் குறிப்பிடப்பட்ட இலாபநட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படுமாறு குறித்து ஒதுக்கப்பட்ட நிதிசார் பரிப்பு ஒன்றின் நயங்கள் அல்லது நட்டங்களை முன்னிலைப்படுத்துவதற்கான தேவைப்பாடுகளை மாத்திரம் பிரயோகிப்பதைத் தெரிவு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளார். காப்புறுதியாளர் ஒருவர் இத் தேவைப்பாடுகளைப் பிரயோகிப்பதற்குத் தெரிவு செய்தால், அவர் பொருத்தமான இடைக்கால ஏற்பாடுகளைப் பிரயோகித்து, தாம் அந்தத் தேவைப்பாடுகளைப் பிரயோகித்த உண்மையை வெளிப்படுத்தி, SLFRS 7 நியமத்தின் பந்திகள் 10 - 11 இல் (SLFRS 9 (2010) நியமத்தினால் திருத்தப்பட்டதற்கு அமைவாக) குறிப்பிடப்பட்டுள்ள வெளிப்படுத்தல்களை தொடர்ச்சியான முறையில் வழங்குதல் வேண்டும்.

20D பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பின் காப்புறுதியாளர் ஒருவரது செயற்பாடுகள் காப்புறுதியுடன் மிக நெருக்கமான தொடர்பு கொண்டதாக கருதப்படும்.

(a) இந்த SLFRS நியமத்தின் பரப்பெல்லைக்கு உட்பட்ட வகையில் ஒப்பந்தங்களில் இருந்து உருவாகும் வைப்புக் கூறுகள் அல்லது இந்த SLFRS நியமத்தின் பந்திகள் 7 – 12 இனைப் பிரயோகித்து காப்புறுதி ஒப்பந்தங்களில் இருந்து தனியாக்கப்பட்ட ஒன்றித்த உய்த்தறி சாதனங்கள் அடங்கலாக பரிப்புக்களின் முன்கொண்டுசெல்லல் தொகையானது, அதன் அனைத்துப் பரிப்புக்களினதும் முன்கொண்டுசெல்லல் பெறுமதியுடன் ஒப்பிடுமிடத்து, முக்கிய அளவாகக் காணப்படல், மற்றும்

(b) காப்புறுதியுடன் தொடர்புபட்ட பரிப்புகளின் மொத்த முன்கொண்டு செல்லும் தொகையின் விகிதாசாரம் (பந்தி 20E இனைப் பார்வையிடுக) அதன் அனைத்து பரிப்புகளினதும் மொத்த முன்கொண்டு செல்லும் தொகையுடன் ஒப்பிடும்போது

i. 90 சதவீதத்திற்கும் அதிகமாக காணப்படுதல்

ii. 90 சதவீதத்துக்கு சமமாக அல்லது குறைவாக ஆனால் 80 சதவீதத்திற்கு அதிகமாக காணப்பட, காப்புறுதியாளர் காப்புறுதியுடன் தொடர்புபடாத எந்த ஒரு முக்கியமான நடவடிக்கைகளிலும் ஈடுபடாது இருத்தல் (பந்தி 20E இனைப் பார்வையிடுக).

20E பந்தி 20D(b) இனை பிரயோகிக்கும் நோக்கங்களுக்காக, காப்புறுதியுடன் தொடர்புபட்ட பரிப்புக்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

(a) பந்தி 20D(a) இல் விபரிக்கப்பட்டவாறு, இந்த SLFRS நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்ட வகையில் ஒப்பந்தங்களில் இருந்து உருவாகும் பரிப்புக்கள்

(b) LKAS 39 நியமத்தைப் பிரயோகித்து இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடும் உய்த்தறிசாதனம் அல்லாத முதலீட்டு ஒப்பந்தப் பரிப்புக்கள் (இலாப, நட்டங்கள் ஊடான சீர்மதிப்பு அளவிடப்படுவதற்கெனக் குறித்துரைக்கப்பட்டவை உள்ளடங்கலாக)

(c) (a) மற்றும் (b) இலிருந்து ஏற்படும் கடப்பாடுகளை நிறைவு செய்வதனால் ஏற்படுகின்ற அல்லது காப்புறுதியாளர் வழங்குவதனால் ஏற்படும் பரிப்புக்கள். அத்தகைய

பரிப்புக்களுக்கான உதாரணங்கள் அத்தகைய ஒப்பந்தங்கள் மற்றும் அந்த ஒப்பந்தத்தினைப் பின்பலப்படுத்தும் சொத்துக்களில் இருந்து உருவாகும் இடர்களைக் குறைப்பதற்காகப் பயன்படுத்தப்படும் உய்த்தறி சாதனங்கள், அந்த ஒப்பந்தங்களில் இருந்து உருவாகும் தற்காலிக வேறுபாடுகளுக்காக செலுத்த வேண்டிய பிற்போடப்பட்ட வரிப் பரிப்புக்கள் மற்றும் காப்புறுதியாளரது ஒழுங்காக்க மூலதனத்தில் உள்ளடக்கப்பட்டுக் காணப்படும் வழங்கப்பட்ட கடன் சாதனங்கள் முதலியவற்றை உள்ளடக்கும்.

20F பந்தி 20D(b)(ii) இன் தேவைப்பாடுகளை பிரயோகிக்கும் தேவைகளுக்காக காப்புறுதியாளர் ஒருவர் காப்புறுதியுடன் தொடர்புபடாத ஏதேனும் முக்கிய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனரா என்பதை மதிப்பிடுவதற்காக, காப்புறுதியாளர் பின்வருவனவற்றைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

(a) வருமானத்தை ஈட்டக்கூடிய மற்றும் செலவுகளை ஏற்படுத்தும் செயற்பாடுகள் மாத்திரம்

(b) நிதிக்கூற்றுக்களின் பயனாளர்கள் காப்புறுதியாளர்களுக்குப் பிரயோகிக்கும் துறைசார் வகைப்படுத்தல் முதலிய பகிரங்கமாக கிடைக்கக்கூடிய தகவல்கள் உள்ளடங்கலான கணியரீதியான அல்லது தரரீதியான காரணிகள் (அல்லது இரண்டும்)

20G 01 ஏப்பிறல் 2016 க்கு உடன் முந்திய வருடாந்த அறிக்கையிடல் திகதியில் SLFRS 9 நியமத்தின் தற்காலிக விலக்களிப்புக்களுக்கு உரிமம் தகைமை பெறுகின்றதா என்பதை உரிமம் மதிப்பீடு செய்யவேண்டும் என பந்தி 20B(b) தேவைப்படுகின்றது. அத் திகதிக்குப் பின்னர்:

(a) முன்னர் SLFRS 9 நியமத்தின் தற்காலிக விலக்களிப்புக்கு தகைமை பெற்றிருந்த உரிமம் ஒன்று, பந்திகள் 20H–20I இல் விவரிக்கப்பட்டுள்ளவாறு, பிற்கால அறிக்கையிடல் காலப் பகுதிகளில் அதன் நடவடிக்கைகளில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டிருப்பின் மாத்திரம், அதனது நடவடிக்கைகள் காப்புறுதியுடன் மிக நெருக்கமாக தொடர்புபட்டுக் காணப்படுகின்றனவா என்பதனை பிற்கால அறிக்கையிடல் காலப் பகுதிகளில் மீள ஆய்வு செய்தல் வேண்டும்.

(b) முன்னர் SLFRS 9 நியமத்தின் தற்காலிக விலக்களிப்புக்கு தகைமை பெற்றிராத உரிமம் ஒன்று, பந்திகள் 20H–20I இல் விவரிக்கப்பட்டுள்ளவாறு, பிற்கால அறிக்கையிடல் காலப் பகுதிகளில் அதன் நடவடிக்கைகளில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டிருப்பின் மாத்திரம், அதனது நடவடிக்கைகள் காப்புறுதியுடன் மிக நெருக்கமாக தொடர்புபட்டுக் காணப்படுகின்றனவா என்பதனை பிற்கால அறிக்கையிடல் காலப் பகுதிகளில் மீள ஆய்வு செய்ய அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

20H பந்தி 20G இனை பிரயோகிக்கும் தேவைகளுக்கு, உரிமத்தின் செயற்பாடுகளில் மாற்றம் என்பது,

(a) உள்ளக அல்லது வெளிவாரி மாற்றங்களின் விளைவாக, உரிமத்தின் சிரேஷ்ட முகாமையினால் தீர்மானிக்கப்படும் .

(b) உரிமத்தின் தொழிற்பாடுகளுக்கு முக்கியமானதாகக் காணப்படும் .

(c) வெளிவாரித் தரப்பினருக்கு விளக்கமளிக்கத் தக்கதாகும்.

அந்த வகையில், உரிமம் தமது தொழிற்பாடுகளுக்கு முக்கியமான ஒரு நடவடிக்கையினை ஆரம்பிக்கும் போதோ அல்லது நிறுத்தும் போதோ அல்லது அதன் நடவடிக்கைகளில் ஒன்றில் ஒரு பாரிய மாற்றத்தை மேற்கொள்ளும் போதோ அத்தகைய மாற்றங்கள் ஏற்படும். உதாரணமாக, உரிமம் வணிக வரிசை ஒன்றை கொள்வனவு செய்தல், விற்றல் அல்லது முடிவுக்கு கொண்டுவரல்.

20I 20H பந்தியில் விவரித்தவாறு உரிமத்தின் செயற்பாடுகளில் மாற்றம் அடிக்கடி இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுவதில்லை. பந்தி 20G இனை பிரயோகிக்கும் தேவைகளுக்காக பின்வருவன உரிமத்தின் செயற்பாடுகளில் ஏற்படும் மாற்றமாக கருதப்படுவதில்லை:

(a) உரிமம் அதன் நடவடிக்கைகள் மூலம் வருமானம் உழைப்பதையோ அல்லது செலவினம் மேற்கொள்வதையோ மாற்றாத உரிமத்தின் உள்ளக நிதியிடல் கட்டமைப்பிலான மாற்றம்.

(b) உரிமம் வணிகத்தின் ஒரு பகுதியை விற்பதற்கான திட்டம், அந்த வணிகப் பகுதியின் சொத்துக்கள் மற்றும் பரிப்புகள் யாவும் SLFRS 5 *விற்பனைக்காக வைத்திருக்கப்படும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட தொழிற்பாடுகள்* நியமத்துக்கு அமைவாக விற்பனைக்காக வைத்திருப்பதாக வகைப்படுத்தப்பட்டாலும் கூட. வணிகப் பகுதி ஒன்றை விற்பதற்கான திட்டமானது உரிமத்தின் நடவடிக்கைகளை ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி அதன் காரணமாக எதிர்காலத்தில் ஒரு மீளாய்வினை ஏற்படுத்தினும் அது இன்னமும் உரிமத்தின் நிதிநிலைக் கூற்றில் ஏற்பிசைவு செய்யப்பட்டு காணப்படும் சொத்துக்கள் மற்றும் பரிப்புக்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தாது.

20J மீளாய்வின் விளைவாக (பந்தி (20G (a) யைப் பார்க்கவும்) உரிமம் SLFRS 9 நியமத்தின் தற்காலிக விலக்களிப்புக்கு தகுதி பெறவில்லையெனில், பின்னர் உரிமம் அந்த மீளாய்விற்குப் பின்னர் உடனடியாக ஆரம்பித்த ஆண்டுக் காலப்பகுதி முடிவு வரை மாத்திரம் அந்த தற்காலிக விலக்களிப்புக்களைத் தொடர அனுமதிக்கப்படுகிறது. இருப்பினும், அந்த உரிமம் 2021 ஜனவரி 1 அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் ஆண்டுக் காலங்களுக்கு SLFRS 9 இனைப் பிரயோகிக்கும். உதாரணமாக, உரிமம் ஒன்று 2018 டிசம்பர் 31 அன்று (அதன் ஆண்டுக்கால முடிவில்) பந்தி இனைப் பிரயோகித்து, SLFRS 9 இன் தற்காலிக விலக்களிப்புக்களுக்கு இனிமேலும் தகுதி இல்லை எனத் தீர்மானித்தால், உரிமம் SLFRS 9 இன் தற்காலிக விலக்குக்களை 2019 டிசம்பர் 31 வரை தொடர அனுமதிக்கப்படும்.

20K முன்னர் SLFRS 9 இலிருந்து தற்காலிக விலக்குகளைப் பிரயோகிப்பதைத் தெரிவு செய்த ஒரு காப்புறுதியாளர் SLFRS 9 ஐ விண்ணப்பிப்பதற்கு பிற்கால ஆண்டுக் காலம் ஒன்றின் ஆரம்பத்தில் மீறமுடியாத வகையில் SLFRS 9 இனைப் பிரயோகிக்கத் தெரிவு செய்ய முடியும்.

**முதன்முறையாக பின்பற்றுனர்**

20L SLFRS 1 *சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களின் முதன்முறை பின்பற்றுகை* நியமத்தில் வரையறுக்கப்பட்டபடி, முதன்முறை பின்பற்றுனர் ஒருவர் பந்தி 20B யில் விவரிக்கப்பட்ட தேர்வுப்பிரமாணங்களை திருப்திசெய்யின் மாத்திரமே, பந்தி 20A யில் விவரித்த SLFRS 9 இன் தற்காலிக விலக்குகளைப் பிரயோகிப்பார். பந்தி 20B (b) ஐப் பிரயோகிப்பதில், முதன்முறையாக பின்பற்றுவோர், அந்தப் பந்தியில் குறிப்பிட்டுள்ள திகதியில் SLFRS களைப் பிரயோகித்த முன்கொண்டுசெல்லல் பெறுமதிகளைப் பயன்படுத்துதல் வேண்டும்.

20M SLFRS 1 நியமமானது முதன்முறையாக பின்பற்றுனர் பிரயோகிக்கக்கூடிய தேவைப்பாடுகள் மற்றும் விதிவிலக்குகளை கொண்டுள்ளது. அத்தகைய தேவைப்பாடுகள் மற்றும் விலக்குகள் (உதாரணமாக, SLFRS 1 இன் பந்திகள் D16-D17) இந்த SLFRS இன் 20A-20Q மற்றும் 39B-39J ஆகிய பந்திகளின் தேவைப்பாடுகளை விஞ்சி நிற்பதில்லை. உதாரணமாக, SLFRS 1 இன் தேவைப்பாடுகள் மற்றும் விலக்குகள் SLFRS 1 இன் முதன்முறை பின்பற்றுனர் ஒருவர் SLFRS 9 இன் தற்காலிக விலக்குகளை பிரயோகிப்பதற்காக பூர்த்தி செய்யவேண்டிய பந்தி 20L இல் குறிப்பிடப்பட்ட தெரிவுப்பிரமாணங்களை விஞ்சி நிற்பதில்லை.

20N பந்திகள் 39B-39J இன் தேவைப்பாடுகளின் தகவல்களை வெளிப்படுத்தும் முதன்முறையான பின்பற்றுனர், அந்த வெளிப்படுத்தல்களை மேற்கொள்ளுவதற்குத் தேவையான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான SLFRS 1 இன் தேவைப்பாடுகள் மற்றும் விலக்குகளை பயன்படுத்தலாம்.

## LKAS 28 இல் குறிப்பிட்ட தேவைப்பாடுகளிலிருந்து தற்காலிக விலக்களிப்பு

20O LKAS 28 *துணை உரிமங்கள் மற்றும் கூட்டு முயற்சிகளிலான முதலீடுகள்* நியமத்தின் பந்திகள் 35-36, உரிமையாண்மை முறையைப் பயன்படுத்தம்போது, ஒரே கணக்கீட்டுக் கொள்கைகளைப் பிரயோகிப்பதை தேவைப்படுத்துகின்றது. எனினும், 01 சனவரி 2021 க்கு முன்னர் ஆரம்பிக்கும்

ஆண்டு காலப்பகுதிகளுக்கு துணைஉரிமங்கள் மற்றும் கூட்டு முயற்சிகளினால் பிரயோகிக்கப்படும் தொடர்புபட்ட கணக்கீட்டுக் கொள்கைகளை கொண்டிருக்க உரிமங்கள் அனுமதிக்கப்படுகின்றன, ஆனால் கட்டாயப்படுத்தப்படவில்லை.

(a) உரிமம் SLFRS 9 நியமத்தைப் பிரயோகிக்க, ஆனால் இணை அல்லது கூட்டுவணிக உரிமம் SLFRS 9 நியமத்தின் தற்காலிக விலக்குகளைப் பிரயோகித்தல்.

(b) உரிமம் SLFRS 9 நியமத்தின் தற்காலிக விலக்குகளைப் பிரயோகிக்க, ஆனால் இணை அல்லது கூட்டுவணிக உரிமம் SLFRS 9 நியமத்தைப் பிரயோகித்தல்.

20P உரிமம் ஒரு இணை உரிமம் அல்லது கூட்டு முயற்சியில் முதலீடுகளை கணக்கிற்கொள்வதற்கு உரிமையாண்மை முறையைப் பயன்படுத்தும்போது:

(a) இணை உரிமம் அல்லது கூட்டு முயற்சியிலான முதலீடுகளை கணக்கிற்கொள்வதற்றாக உரிமையாண்மை முறையை பிரயோகிக்க முன்னர் SLFRS 9 நியமம் பயன்படுத்தப்பட்டு இருப்பின் (அந்த உரிமத்தினால் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு மாற்றத்தையும் பிரதிபலித்த பின்), தொடர்ந்தும் SLFRS 9 நியமமே பயன்படுத்தப்படும்.

(b) இணை உரிமம் அல்லது கூட்டு முயற்சியிலான முதலீடுகளை கணக்கிற்கொள்வதற்காக உரிமையாண்மை முறையை பிரயோகிக்க முன்னர் SLFRS 9 நியமத்தின் தற்காலிக விலக்களிப்புக்கள் பயன்படுத்தப்பட்டிருப்பின் (அந்த உரிமத்தினால் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு மாற்றத்தையும் பிரதிபலித்த பின்), பிற்காலங்களுக்கு SLFRS 9 நியமம் பயன்படுத்தப்படும்.

20Q ஒரு உரிமம் 20O மற்றும் 20P (b) பந்திகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு இணை உரிமம் அல்லது கூட்டு முயற்சிகளுக்கும் தனித்தனியாகப் பயன்படுத்தும்.

35A-35N, 39B-39M மற்றும் 46-49 ஆகிய புதிய பந்திகள் சேர்க்கப்பட்டுள்ளன. 35A, 35K, 35M, 39A, 39J, 45 மற்றும் 47 ஆகிய புதிய பந்திகளின் கீழ் புதிய தலைப்புகள் சேர்க்கப்பட்டுள்ளன.

### நிதி சாதனங்களிலான விருப்பத்தேர்வு பங்கேற்பு அம்சங்கள்

...

35A பந்திகள் 20A, 20L மற்றும் 20O ஆகியவற்றில் உள்ள தற்காலிக விலக்குகள் மற்றும் 35B பந்தியில் உள்ள மேலடுக்கு அணுகுமுறை ஆகியனவும், ஒரு விருப்பத்தேர்வுரிமைப் பங்குபெறும் அம்சத்தைக் கொண்ட நிதி சாதனங்கள் வழங்குனருக்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ளது. அதன்படி, பந்திகள் 3(a) -3(b), 20A- 20Q, 35B-35N, 39B-39M மற்றும் 46-49 ஆகியவற்றில் உள்ள காப்புறுதியாளர் ஒருவருக்கான அனைத்து குறிப்புகளும், விருப்பத்தேர்வுரிமைப் பங்குபெறும் அம்சத்தைக் கொண்ட நிதி சாதனங்கள் வழங்குனருக்குமான குறிப்புரைகளாக வாசிக்கப்படும்.

## முன்னிலைப்படுத்தல்

### மேலடுக்கு அணுகுமுறை (overlay approach)

**35B ஒரு காப்புறுதியாளர் விசேடமாகக் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் சொத்துக்களுக்கு மேலடுக்கு அணுகுமுறையைப் பிரயோகிக்க அனுமதிக்கப்பட்டுள்ளார். ஆனால் கட்டாயப்படுத்தப்படவில்லை. மேலடுக்கு அணுகுமுறையைப் பிரயோகிக்கும் காப்புறுதியாளர்:**

**(a) வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களுக்கு காப்புறுதியாளர் LKAS 39 நியமத்தைப் பிரயோகித்திருப்பின் அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவில் அவ்வாறு வகைப்படுத்திய நிதிச் சொத்துக்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இலாபநட்ட விளைவுகளை உரிமம் இலாப நட்டங்கள் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானம் ஆகியவற்றிற்கு இடையில்**

**மீளவகைப்படுத்தும். அதன்படி, அவ்வாறு மீளவகைப்படுத்திய தொகையானது பின்வருவனவற்றுக்கு இடையே உள்ள வித்தியாசத்திற்கு சமமானதாகும்:**

**(i) வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களுக்கு காப்புறுதியாளர் SLFRS 9 நியமத்தைப் பிரயோகித்து, இலாப நட்டங்களில் அறிக்கையிட்ட தொகை**

**(ii) வகைப்படுத்தப்பட்ட நிதிச்சொத்துக்களுக்கு காப்புறுதியாளர் LKAS 39 நியமத்தைப் பிரயோகித்திருப்பின், இலாப நட்டங்களில் அறிக்கையிடப்பட்டிருக்கக்கூடிய தொகை**

**(b) இந்த SLFRS இன் பந்திகள் 35B-35N, 39K-39M மற்றும் 48-49 இல் விபரிக்கப்பட்டவை தவிர, அதன் நிதி சாதனங்களுக்குப் பொருத்தமான ஏனைய அனைத்து பொருத்தமான SLFRS நியமங்களையும் பிரயோகிக்கும்.**

**35C ஒரு காப்புறுதியாளர் பந்தி 35B இல் விபரிக்கப்பட்ட மேலடுக்கு அணுகுமுறையை, பின்வருவனவற்றை முன்னர் பயன்படுத்திய பின்னர் முதலில் SLFRS 9 ஐப் பிரயோகிக்கும் சந்தர்ப்பம் உள்ளடங்கலான, SLFRS 9 நியமத்தினை முதலில் பயன்படுத்தும் போது மட்டுமே தேர்ந்தெடுக்க முடியும்:**

**(a) SLFRS 9 நியமத்தின் பந்தி 20A இல் விவரிக்கப்பட்ட SLFRS 9 நியமத்திலிருந்தான தற்காலிக விலக்களிப்பு, அல்லது**

**(b) SLFRS 9 நியமத்தின் பந்திகள் 5.7.1(c), 5.7.7–5.7.9, 7.2.14 மற்றும் B5.7.5– B5.7.20 இல் குறிப்பிடப்பட்டுள்ள இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடுவதென வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களின் நயங்கள் அல்லது நட்டங்களை முன்னிலைப்படுத்தும் தேவைப்பாடுகளுக்காக மாத்திரம்.**

35D காப்புறுதியாளர் இலாப, நட்டங்கள் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானம் ஆகியவற்றிற்கு இடையில் மீள்வகைப்படுத்தப்பட்ட தொகையினை மேலடுக்கு அணுகுமுறையை பயன்படுத்தி முன்னிலைப்படுத்துவார்:

(a) இலாப, நட்டத்தில் ஒரு தனியான வரிசை உருப்படியாக, மற்றும்

(b) ஏனைய முற்றடக்க வருமானத்தில், ஏனைய முற்றடக்க வருமானத்தின் ஓர் தனியான மூலக்கூறாக.

35E பின்வரும் தேர்வு நிபந்தனைகள் திருப்தி செய்யப்பட்டால் மாத்திரம் நிதிச்சொத்து ஒன்று மேலடுக்கு அணுகுமுறையை பிரயோகிப்பதற்கு தகைமை வாய்ந்ததாகும்:

(a) அது SLFRS 9 நியமத்தினைப் பயன்படுத்தி இலாப நட்டங்கள் ஊடான சீர்மதிப்பில் அளவிடப்படுவதாக, ஆனால் எந்த ஒரு கட்டத்திலும் LKAS 39 நியமத்தினைப் பயன்படுத்தி இலாப நட்டங்கள் ஊடான சீர் மதிப்பில் அளவிடப்பட்டதாக இருத்தலாகாது.

(b) இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்ட ஒப்பந்தங்களுடன் தொடர்புபடாத எந்த ஒரு செயற்பாட்டுக்காகவும் அது வைத்திருக்கப்படுவதில்லை. மேலடுக்கு அணுகுமுறை பிரயோகிப்பதற்குத் தகைமை பெறாத நிதிச் சொத்துக்களுக்கு உதாரணமாக, வங்கியியல் செயற்பாடுகளுக்காக வைத்திருக்கப்படும் மற்றும் இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு அப்பாற்பட்ட முதலீட்டு ஒப்பந்தங்களுடன் தொடர்புபட்ட நிதிகளில் வைத்திருக்கப்படும் நிதிச் சொத்துக்கள் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

35F காப்புறுதியாளர் ஒருவர் மேலடுக்கு அணுகுமுறையை பிரயோகிக்கத் தெரிவு செய்யும்போது (பந்தி 35C இனைப் பார்வையிடுக) தகைமைபெற்ற நிதிச்சொத்து ஒன்றினை மேலடுக்கு அணுகுமுறைக்கு வகைப்படுத்தலாம். பிற்பட்ட காலங்களில், பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால் மாத்திரமே தகைமைவாய்ந்த நிதிச்சொத்தை மேலடுக்கு அணுகுமுறைக்கு வகைப்படுத்தமுடியும்:

(a) சொத்து முதன்முறையாக ஏற்பிசைவு செய்யப்படும்போது, அல்லது

(b) முன்னர் தேர்வு நிபந்தனைகளை திருப்பி செய்திராத சொத்து ஒன்று, பந்தி 35E(b) இல் குறிப்பிடப்பட்ட தேர்வு நிபந்தனைகளை புதிதாக திருப்தி செய்யும்போது.

35G காப்புறுதியாளர் தகைமைபெற்ற நிதிச் சொத்துக்களை பந்தி 35F இனைப் பயன்படுத்தி, ஒவ்வொரு சாதனங்களாக மேலடுக்கு அணுகுமுறைக்கு வகைப்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளார்.

35H பொருத்தமானபோது, பந்தி 35F(b) இனைப் பயன்படுத்தி, புதிதாக வகைப்படுத்திய நிதிச் சொத்துக்களுக்கு மேலடுக்கு அணுகுமுறையைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக:

(a) வகைப்படுத்திய திகதியில் சீர்மதிப்பு அதன் புதிய காலத்தேய்வு செய்யப்பட்ட முன்கொண்டு செல்லல் பெறுமதியாக இருக்கும், அத்துடன்

(b) விளைவு வட்டி வீதமானது, வகைப்படுத்திய திகதியில் அதன் சீர்மதிப்பின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும்.

35 I மேலடுக்கு அணுகுமுறைக்கும் வகைப்படுத்திய நிதி சொத்து ஒன்றுக்கு, அது ஏற்பிசைவு நீக்கப்படும் வரை, உரிமம் அந்த அணுகுமுறையை தொடர்ந்து பிரயோகிக்கும். எனினும்,

(a) குறித்த சொத்தானது, பந்தி 35E(b) இல் குறிப்பிட்ட தேர்வுப் பிரமாணங்களை தொடர்ந்தும் திருப்திசெய்யாத போது, உரிமம் அந்த நிதிச்சொத்தின் வகைப்படுத்தலை நீக்கும். உதாரணமாக, உரிமம் சொத்தொன்றினை வங்கியியல் நடவடிக்கைகளுடன் தொடர்புபட்ட பகுதிகளுக்கு மாற்றல் செய்வதன் காரணமாக அல்லது உரிமம் காப்புறுதி நடவடிக்கைகளை நிறுத்துவதன் காரணமாக நிதிச்சொத்து ஒன்று அவசியமான தேர்வுப் பிரமாணங்களை திருப்தி செய்யாது போகலாம்.

(b) எந்தவொரு வருட ஆரம்பத்திலும் எல்லா வகைப்படுத்தப்பட்ட நிதிச் சொத்துக்களுக்கும் மேலடுக்கு அணுகுமுறையினை நிறுத்தலாம். அவ்வாறு மேலடுக்கு அணுகுமுறையினை நிறுத்துவதற்குத் தெரிவு செய்யும் உரிமம், LKAS 8 நியமத்துக்கு அமைவாகத் தமது கணக்கீட்டு கொள்கையின் மாற்றத்தினை கணக்கு வைக்கும்.

35J உரிமம் பந்தி 35I(a) இனைப் பயன்படுத்தி நிதிச்சாதனம் ஒன்றினை வகுப்பு நீக்கம் செய்யும் போது, அந்தச் சொத்து தொடர்பான ஏதேனும் மீதிகள் இருப்பின் அதனை திரண்ட ஏனைய முற்றடக்க வருமானங்களில் இருந்து இலாப நட்டங்களுக்கு மீள்வகைப்படுத்தல் சீராக்கமாக, மீள வகைப்படுத்தும்.

35K உரிமம் பந்தி 35I(b) இனை பிரயோகித்து, மேலடுக்கு அணுகுமுறையினை நிறுத்தினால் அல்லது தொடர்ந்தும் அது ஒரு காப்புறுதியாளராக செயற்படாத போது, அது பிற்பட்ட காலங்களுக்கு மேலடுக்கு அணுகுமுறையினைப் பின்பற்றுதல் ஆகாது. மேலடுக்கு அணுகுமுறையைப் பிரயோகிக்கத் தெரிவுசெய்த (பந்தி 35C இனைப் பார்வையிடுக), ஆனால் தகைமை வாய்ந்த நிதிச்சொத்துக்களைக் கொண்டிராத (பந்தி 35E இனைப் பார்வையிடுக) உரிமம் ஒன்று, பிற்பட்ட காலங்களில் அது தகைமைவாய்ந்த நிதிச்சொத்துக்களைக் கொண்டிருக்கும் போது மேலடுக்கு அணுகுமுறையினைப் பிரயோகிக்கும்.

### ஏனைய தேவைப்பாடுகளுடனான இடைத் தொடர்பு

35L இந்த நியமத்தின் பந்தி 30, சிலவேளைகளில் நிழல் கணக்கியல் (shadow accounting) என அழைக்கப்படும் முறையினைப் பிரயோகிக்க அனுமதிக்கிறது. காப்புறுதியாளரொருவர் மேலடுக்கு அணுகுமுறையை பிரயோகித்தால், அவருக்கு நிழல் கணக்கியல் பிரயோகிக்க தக்கதாகும்.

35M தொகை ஒன்றினை இலாப நட்டங்கள் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஆகியவற்றுக்கு இடையே பந்தி 35B யினை பயன்படுத்தி மீள வகைப்படுத்தலானது ஏனைய முற்றடக்க வருமானத்தில் உள்ள வருமான வரி முதலிய பிற தொகைகள் உள்ளடங்கலான பல்வேறு

விளைவுகளை கொண்டிருக்கும். அத்தகைய விளைவுகளைத் தீர்மானிப்பதற்காக, காப்புறுதியாளர் LKAS 12 *வருமான வரிகள்* முதலிய பொருத்தமான SLFRS நியமங்களை பிரயோகிப்பார்.

***முதன்முறை பின்பற்றுனர்***

35N மேலடுக்கு அணுகுமுறையைப் பிரயோகிக்கத் தீர்மானித்துள்ள முதன்முறை பின்பற்றுனர் ஒருவர், ஒப்பீட்டு தகவல்களை நியமத்துக்கு இணக்கமான வகையில் மீள்கூற்று செய்தால் மாத்திரமே மேலடுக்கு அணுகுமுறையை பிரதிபலிக்கத்தக்க வகையில் ஒப்பீட்டு தகவல்களை மீள்கூற்று செய்யும். (SLFRS 1 நியமத்தின் பந்திகள் E1–E2 இனைப் பார்வையிடுக)

…

## வெளிக்காட்டல்

...

### SLFRS 9 நியமத்திலிருந்து தற்காலிக விலக்களிப்புகள் பற்றிய வெளிக்காட்டல்கள்

39B காப்புறுதியாளர் ஒருவர் SLFRS 9 நியமத்தின் தற்காலிக விலக்களிப்புகளை பிரயோகிப்பதற்கு தெரிவுசெய்தால், பின்வருவன தொடர்பில் நிதிக்கூற்றுக்களின் பயனாளர்களுக்கு தகவல் வழங்கும் வகையில் வெளிக்காட்டல்களை மேற்கொள்ளுதல் வேண்டும்:

(a) காப்புறுதியாளர் எவ்வாறு தற்காலிக விலக்களிப்புக்கு தகைமை பெற்றார் என விளங்கிக் கொள்ள, அத்துடன்

(b) SLFRS 9 நியமத்தைப் பிரயோகிக்கும் உரிமங்களுக்கு தற்காலிக விலக்குகளை பிரயோகிக்கும் காப்புறுதியாளர்களை ஒப்பீடு செய்யதற்கு.

39C பந்தி 39B(a) இன் தேவைப்பாடுகளுடன் இசைவதற்கு SLFRS 9 இன் தற்காலிக விலக்குகளைப் பிரயோகப்படுதல், SLFRS 9 நியமத்தின் தற்காலிக விலக்குகளுக்கு தகைமைபெறும் திகதி, தீர்மானிக்கப்பட்ட முறைமை ஆகியவை தொடர்பான உண்மைகளை பின்வருவன உள்ளடங்கலாக வெளிக்காட்டும்:

(a) இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்ட ஒப்பந்தங்களில் இருந்து உருவாகும் பரிப்புகளின் கொண்டுசெல்லல் பெறுமதியானது (அதாவது பந்தி 20E(a) இல் விபரிக்கப்பட்ட பரிப்புகள்) சகல பரிப்புகளின் மொத்த முன்கொண்டுசெல்லற் பெறுமதியின் 90 சதவீதத்திற்கு சமமாகவோ அல்லது குறைவாகவோ காணப்படின், இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்ட ஒப்பந்தங்களில் இருந்து உருவாகாத, காப்புறுதியுடன் தொடர்புபட்ட பரிப்புகளின் (அதாவது பந்தி 20E(b) மற்றும் 20E (c) இல் விவரிக்கப்பட்ட பரிப்புகள்) இயல்புகள் மற்றும் முன்கொண்டு செல்லல் தொகை.

(b) காப்புறுதியுடன் தொடர்புபட்ட பரிப்புகளின் மொத்த முன்கொண்டு செல்லும் பெறுமதியின் வீதாசாரம் அனைத்து பரிப்புகளதும் மொத்த முன்கொண்டு செல்லல் பெறுமதியின் 90 சதவீதத்திற்கு சமமாகவோ அல்லது குறைவாகவும் ஆனால் 80 சதவீதத்திற்கு அதிகமாகவும் இருப்பின், காப்புறுதியாளர் காப்புறுதியுடன் முக்கியத்துவமான வகையில் தொடர்புபடாத நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்பதை தீர்மானித்த முறைமை, அது கருத்தில் கொண்ட தகவல்கள் உள்ளடங்கலாக, அத்துடன்

(c) பந்தி 20G(b) யினை பயன்படுத்தி மீள் மதிப்பீட்டின் அடிப்படையில் காப்புறுதியாளர், SLFRS 9 நியமத்தின் தற்காலிக விலக்குகளுக்கு தகமை பெற்றிருப்பின்,

(i) அத்தகைய மீள்மதிப்பீட்டுக்கான காரணம்

(ii) அதன் செயற்பாடுகளில் பொருத்தமான மாற்றங்கள் ஏற்பட்ட திகதி, மற்றும்

(iii) அதன் செயற்பாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பான ஒரு விரிவான விளக்கம் மற்றும் அந்த மாற்றத்தின் காரணமாக காப்புறுதியாளருடைய நிதிக் கூற்றுக்களில்

ஏற்பட்ட விளைவுகள் தொடர்பான ஒரு தரரீதியான விபரணம்

39D பந்தி 20G(a) யினை பிரயோகித்து, தமது நடவடிக்கைகள் தொடர்ந்தும் காப்புறுதியுடன் நெருக்கமான வகையில் தொடர்புபட்டதாக காணப்படவில்லை என உரிமம் முடிவு செய்தால், அது SLFRS 9 நியமத்தைப் பிரயோகிக்க முன்பாக ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதிக்கும் பின்வரும் தகவல்களை வெளிக்காட்டல் வேண்டும்:

(a) அது தொடர்ந்தும் SLFRS 9 நியமத்தின் தற்காலிக விலக்குகளுக்கு தகைமை பெறவில்லை என்னும் உண்மை

(b) அதன் செயற்பாடுகளில் உரிய மாற்றங்கள் ஏற்பட்ட திகதி, மற்றும்

(c) அதன் செயற்பாடுகளில் ஏற்பட்ட மாற்றங்கள் தொடர்பான ஒரு விரிவான விளக்கம் மற்றும் அந்த மாற்றத்தின் காரணமாக அதன் நிதிக் கூற்றுக்களில் ஏற்பட்ட விளைவுகள் தொடர்பான ஒரு தர ரீதியான விபரணம்

39E பந்தி 39B(b) யின் தேவைப்பாடுகளுக்கு இணங்குவதற்காக, பின்வரும் இரு நிதிச் சொத்துக்களின் குழுக்களுக்கும் ஒவ்வொரு அறிக்கையிடல் காலப்பகுதி முடிவிலுமான சீர்மதிப்பு மற்றும் குறித்த காலப்பகுதியில் சீர்மதிப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியவற்றைத் தனித்தனியாக வெளிக்காட்டும்:

(a) SLFRS 9 நியமத்துக்கு அமைய, விற்பனைக்காக வைத்திருக்கப்படுபவை என்னும் வரைவிலக்கணத்தை திருப்தி செய்யும் நிதிச் சொத்துக்கள் அல்லது சீர்மதிப்பின் அடிப்படையில் பெறுபேறு மதிப்பீடு செய்யப்பட்டு முகாமை செய்யப்படும் நிதிச் சொத்துக்கள் (SLFRS 9 நியமத்தின் பந்தி B4.1.6 இனைப் பார்வையிடுக) நீங்கலான, முதல் தொகை மற்றும் மீதமுள்ள முதல் தொகை மீதான வட்டி ஆகியவற்றுக்கான கொடுப்பனவை மாத்திரம் குறித்த திகதிகளில் காசுப்பாய்ச்சலாக ஏற்படுத்தத்தக்க ஒப்பந்த கட்டுறுத்துக்களுடன் கூடிய நிதிச் சொத்துக்கள் (அதாவது SLFRS 9 நியமத்தின் பந்திகள் 4.1.2(b) மற்றும் 4.1.2A(b) இல் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை திருப்தி செய்யும் நிதிச் சொத்துக்கள்

(b) 39E(a) பந்தியில் குறிப்பிட்டவை தவிர்ந்த ஏனைய நிதிச் சொத்துக்கள்; அதாவது பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் நிதிச் சொத்துக்கள்:

(i) முதல் தொகை மற்றும் நிலுவையிலுள்ள முதல் தொகை மீதான வட்டி ஆகியவற்றுக்கான கொடுப்பனவை மாத்திரம் குறித்த திகதிகளில் காசுப்பாய்ச்சலாக ஏற்படுத்தத்தக்க ஒப்பந்த கட்டுறுத்துக்களுடன் கூடிய நிதிச்சொத்துக்கள்

(ii) SLFRS 9 இல் விற்பனைக்காக வைத்திருப்பவை எனும் வரைவிலக்கணத்தை திருப்தி செய்யும் நிதிச் சொத்துக்கள்

(iii) முகாமை செய்யப்பட்டு அதன் செயற்பாடு சீர்மதிப்பின் அடிப்படையில் மதிப்பிடப்படும் நிதிச் சொத்துக்கள்

39F பந்தி 39E இல் குறிப்பிடப்பட்ட தகவல்களை வெளிக்காட்டும்போது, காப்புறுதியாளர்:

(a) SLFRS 7 நியமத்தின் பந்தி 29(a) (உதாரணமாக, குறுங்கால வியாபார வருமதிகள்) இனைப் பிரயோகித்து அதன் சீர்மதிப்பை வெளிக்காட்டல் தேவைப்படுத்தப்படாதவிடத்து, LKAS 39 நியமத்தைப் பிரயோகித்து அளவிட்ட நிதிச் சொத்தின் முன்கொண்டு செல்லல் பெறுமதியை அதன் சீர்மதிப்பின் ஒரு நியாயமான அண்ணளவாக்கமாக கொள்ளலாம், மற்றும்

(b) நிதிச் சொத்துக்களின் இயல்புகளை நிதிக் கூற்றுக்களின் பயனாளர்கள் விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் அவசியமான விளக்கமான தகவல்களைக் கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

39G பந்தி 39B(b) உடன் ஒத்திசைவதற்கு ஏதுவாக, காப்புறுதியாளர் பந்தி 39E (a) இல் விபரிக்கப்பட்ட நிதிச் சொத்துடன் இயல்பாக இணைந்த கணிசமான கடன் இடர்ச் செறிவு அடங்கலான முக்கிய கடன் இடர்த்தகவு பற்றிய தகவல்களை வெளிக்காட்டும். காப்புறுதியாளர் அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவில் உள்ள நிதிச் சொத்துக்களுக்கு குறைந்தபட்சம் பின்வரும் தகவல்களை வெளிக்காட்டும்:

(a) SLFRS 7 நியமத்தில் வரையறுக்கப்பட்டவாறு, கடன் இடர் தரவரிசைப்படுத்தல் தரங்கள் மூலம் LKAS 39 நியமத்தை பிரயோகித்தலினால் முன்கொண்டுசெல்லல் பெறுமதிகள் (காலத் தேய்மானம் செய்யப்பட்ட பெறுமதியில் அளவிடப்படும் நிதி சொத்துக்களுக்கு, ஏதேனும் சேத இழப்பு ஒதுக்கீடுகளை சீராக்குவதற்கு முன்பாக)

(b) அறிக்கையிடல் காலப்பகுதியின் முடிவில் குறைந்த கடன்இடரை கொண்டிராத பந்தி 39E (a) யில் விபரிக்கப்பட்ட சொத்துக்களுக்கு LKAS 39 நியமத்தை பிரயோகித்த சீர்மதிப்பு மற்றும் முன்கொண்டு செல்லல் பெறுமதிகள் (காலத்தேய்மானம் செய்யப்பட்ட பெறுமதியில் அளவிடப்படும் நிதி சொத்துக்களுக்கு, ஏதேனும் சேத இழப்பு ஒதுக்கீடுகளை சீராக்குவதற்கு முன்பாக). இந்த வெளிக்காட்டல் தேவைகளுக்காக SLFRS 9 நியமத்தின் பந்தி B5.5.22 நிதிச்சாதனம் ஒன்றின் கடன் இடரானது குறைந்த மட்டத்தில் கருதப்பட முடியுமா என்பதை மதிப்பீடு செய்யும் பொருத்தமான தேவைப்பாடுகளை வழங்குகிறது.

39H பந்தி 39B(b) உடன் ஒத்திசைவதற்கு ஏதுவாக, குழுமமொன்றின் உறுப்பினரான காப்புறுதியாளர் உரிமம் குறித்த அறிக்கையிடல் காலப்பகுதிக்கான ஒன்றித்த நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டாத SLFRS 9 நியமம் தொடர்பான பகிரங்கத் தகவல்களை நிதிக்கூற்றின் பயனாளர்கள் எங்கிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என்னும் தகவலை வெளிப்படுத்தும். உதாரணமாக, குழுமத்தின் உள்ளே SLFRS 9 நியமத்தை பயன்படுத்தும் குழுமத்திலுள்ள உரிமத்தின் தனியான அல்லது வேறான நிதிக்கூற்றுக்களில் பொதுமக்களுக்கு கிடைக்கத்தக்க பகிரங்க தகவல்களை பெற்றுக் கொள்ளமுடியும்.

39I உரிமம் LKAS 28 நியமத்தின் தேவைப்பாடுகளிலிருந்து பந்தி 20O இல் உள்ள விலக்களிப்பை பிரயோகிக்க தெரிவு செய்திருப்பின், அந்த விடயத்தை வெளிக்காட்டும்.

39J இணை உரிமம் அல்லது கூட்டு முயற்சி உரிமம் ஒன்றிலான முதலீடுகளுக்கு உரிமையாண்மை முறையை பயன்படுத்தி கணக்கு வைக்கும்போது, உரிமம் SLFRS 9 நியமத்தின் தற்காலிக விலக்குகளை பிரயோகித்திருப்பின் (உதாரணமாக பந்தி 20O(a) யை பார்வையிடுக) SLFRS 12 *ஏனைய உரிமங்களிலான அக்கறைகள் தொடர்பான வெளிக்காட்டல்கள்* நியமத்தின் தேவைப்பாடுகளுக்கு மேலதிகமாக உரிமம் பின்வரும் தகவல்களை வெளிக்காட்டும்:

(a) உரிமத்துக்கு பொருண்மை தன்மை வாய்ந்த ஒவ்வொரு இணை உரிமம் மற்றும் கூட்டு தொழில்முயற்சி ஆகியவை தொடர்பாக பந்திகள் 39B–39H இல் தேவைப்படுத்தப்பட்டுள்ள தகவல்கள், வெளிக்காட்டப்படும் தகவல்கள், அத்தகைய தொகைகள் தொடர்பாக உரிமத்தின் பங்கினை மாத்திரமன்றி இணை உரிமம் அல்லது கூட்டு வணிக உரிமத்தின் நிதிக்கூற்றுக்களில் உரிமையாண்மை முறையை பயன்படுத்தி (SLFRS 12 நியமத்தின் பந்தி B14(a) இனைப் பார்வையிடுக) உரிமத்தினால் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்களை பிரதிபலித்த பின்னரானதாக இருக்கும்.

(b) தனித்தனியாக பொருண்மையற்ற இணை உரிமங்கள் மற்றும் கூட்டு உரிமைகளுக்கான பந்திகள் 39B–39H இல் விவரிக்கப்பட்ட திரண்ட தரம்சார்ந்த தகவல்கள். வெளிக்காட்டும் திரண்ட தொகைகள்:

(i) அந்தத் தொகைகளின் உரிமத்தின் பங்காக இருப்பவை, அத்துடன்

(ii) இணை உரிமைகளுக்கு வெளிக்காட்டப்படும் தொகைகள் கூட்டுத் தொழில்முயற்சி உரிமங்களுக்கு வெளிப்படுத்தப்படும் தொகைகளிலிருந்து வேறாகக் காட்டப்படும் .

## மேலடுக்கு அணுகுமுறை தொடர்பான வெளிக்காட்டல்கள்

**39K மேலடுக்கு அணுகுமுறையை பிரயோகிக்கும் காப்புறுதியாளர் நிதிக்கூற்றின் பயனாளர்கள் விளங்கிக்கொள்ளத்தக்க வகையில் பின்வரும் தகவல்களை வெளிக்காட்ட வேண்டும்:**

**(a) இலாப நட்டங்கள் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானம் ஆகியவற்றுக்கிடையில் அறிக்கையிடல் காலப்பகுதியில் மீளவகைப்படுத்தப்பட்ட தொகைகள் கணிக்கப்பட்ட முறை, அத்துடன்**

**(b) மீள வகைப்படுத்தல் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட்ட விளைவுகள்**

39L பந்தி 39Kஉடன் ஒத்திசைவுக்கு ஏதுவாக காப்புறுதியாளர் பின்வருவனவற்றை வெளிக்காட்டுவர்:

(a) அது மேலடுக்கு அணுகுமுறையை பிரயோகிக்கிறது என்னும் உண்மை;

(b) நிதிச் சொத்துக்களின் வகைகளில் காப்புறுதியாளர் மேலடுக்கு அணுகுமுறையை பிரயோகிக்கும் நிதிச் சொத்துகளுக்கு அறிக்கையிடல் காலப்பகுதி முடிவில் காணப்படும் முன்கொண்டுசெல்லல் பெறுமதி

(c) இந்த நியமத்தின் நோக்கெல்லைக்கு உட்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும் சட்டரீதியான, உரிமத்துக்கு வெளியான வகையில் வைத்திருக்கப்படும் ஏதேனும் வகைப்படுத்தப்பட்ட நிதிச்சொத்துக்கள் தொடர்பான விளக்கம் அடங்கலாக, மேலடுக்கு அணுகுமுறைக்காக நிதிச் சொத்துக்களை வகைப்படுத்தும் அடிப்படை

(d) கீழ்வருவன அடங்கலாக இலாப நட்டங்கள் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானம் ஆகியவற்றுக்கு இடையில் அறிக்கையிடல் காலப்பகுதியின் போது மீள வகைப்படுத்தப்பட்ட தொகைகள் தொடர்பாக அவை பெறப்பட்ட விதம் பற்றி நிதிக்கூற்றுக்களின் பயனர்கள் புரிந்துகொள்ளத்தக்க வகையிலான ஓர் விளக்கம்:

(i) SLFRS 9 நியமத்தினை பிரயோகித்து வகைப்படுத்திய நிதிச்சொத்துக்களுக்காக இலாப நட்டங்களில் அறிக்கையிடப்பட்ட தொகை

(ii) காப்புறுதியாளர் LKAS 39 நியமத்தை பிரயோகித்திருப்பின் வகைப்படுத்திய நிதிச் சொத்துக்கள் தொடர்பாக இலாப நட்டத்தில் அறிக்கையிடப்பட்டிருக்கக்கூடிய தொகை

(e) இலாப, நட்டத்திலுள்ள ஒவ்வொரு பாதிக்கப்பட்ட வரிசை உருப்படியின்மீதும், பந்தி 35B மற்றும் 35M களில் விவரிக்கப்பட்ட மீள் வகைப்படுத்தல் காரணமாக இலாப நட்டங்களை காணப்படும் ஒவ்வொரு வரிசை உருப்படிகள் மீது ஏற்பட்ட விளைவுகள், மற்றும்

(f) அறிக்கையிடல் காலப்பகுதியின் போது காப்புறுதியாளர் நிதி சொத்துக்கள் தொடர்பான வகைப்படுத்தலை மாற்றியிருப்பின்,

(i) மேலடுக்கு அணுகுமுறையைப் பயன்படுத்தி புதிதாக வகைப்படுத்திய நிதிச் சொத்துக்கள் தொடர்பாக அறிக்கையிடல் காலத்தின்போது இலாப நட்டங்கள் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஆகியவற்றிடையே மீளவகைப்படுத்திய தொகைகள் (பந்தி 35F(b) யினைப் பார்வையிடுக)

(ii) நிதிச் சொத்தின் வகைப்படுத்தல் நீக்கப்படாதிருப்பின் அறிக்கையிடல் காலத்தின்போது இலாப நட்டங்கள் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஆகியவற்றிடையே மீள வகைப்படுத்தப்பட்டு இருக்கத்தக்க தொகைகள் (பந்தி 35I(a) இனைப் பார்வையிடுக), மற்றும்

(iii) நிதிச்சொத்தின் வகைப்படுத்தல் நீக்கப்பட்டிருப்பின் அறிக்கையிடல் காலத்தின்போது இலாப நட்டங்கள் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஆகியவற்றிடையே மீளவகைப்படுத்தப்பட்டு இருந்திருக்கக்கூடிய தொகைகள் (பந்தி 35J இனை பார்வையிடுக)

39M உரிமம் அதன் இணை உரிமங்கள் மற்றும் கூட்டு தொழில்முயற்சிகள் ஆகியவற்றின் மீதான முதலீடுகள் தொடர்பாக உரிமையாண்மை முறையை பயன்படுத்தி கணக்கு வைக்கும் போது மேலடுக்கு அணுகுமுறையை பிரயோகித்திருப்பின் SLFRS 12 நியமத்தினால் தேவைப்படுத்தப்படும் தகவல்களுக்கு மேலதிகமாக உரிமம் பின்வரும் விடயங்களை வெளிப்படுத்தும்:

(a) உரிமத்துக்கு பொருண்மைவாய்ந்த ஒவ்வொரு இணை உரிமம் மற்றும் கூட்டு வணிக உரிமம் ஆகியவை தொடர்பாக பந்திகள் 39K–39L இல் தேவைப்படுத்தப்பட்டுள்ள தகவல்கள். வெளிப்படுத்தும் தகவல்கள், அத்தகைய தொகைகள் தொடர்பாக உரிமத்தின் பங்கினை மாத்திரமன்றி இணை உரிமம் அல்லது கூட்டு தொழில்முயற்சியின் நிதிக்கூற்றுக்களில் உரிமையாண்மை முறையை பயன்படுத்தி (SLFRS 12 நியமத்தின் பந்தி B14(a) இனைப் பார்வையிடுக) உரிமத்தினால் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்களை பிரதிபலித்த பின்னரானதாக இருக்கும்.

(b) தனித்தனியாக பொருண்மையற்ற இணை உரிமங்கள் மற்றும் கூட்டு தொழில்முயற்சிகளுக்கான பந்திகள் 39K–39L(d) மற்றும் 39L இல் விவரிக்கப்பட்டுள்ள திரண்ட தரம்சார்ந்த தகவல்கள் மற்றும் பந்தி 35B இல் குறிப்பிடப்பட்ட மீள் வகைப்படுத்தலின் காரணமாக இலாப நட்டங்கள் மற்றும் ஏனைய முற்றடக்க வருமானங்கள் ஆகியவற்றில் ஏற்படும் திரண்ட விளைவு.

(i) வெளிக்காட்டப்பட்ட குறித்த தொகைகள் தொடர்பான உரிமத்தின் பங்காக இருக்கும், அத்துடன்

(ii) இணை உரிமைகளுக்காக வெளிக்காட்டப்படும் தொகைகள் கூட்டுத்தொழில் முயற்சி உரிமங்களுக்காக வெளிக்காட்டப்படும் தொகைகளிலிருந்து வேறாகக் காட்டப்படும்.

...

## விளைவுக்கு வரும் திகதி மற்றும் இடைக்கால ஏற்பாடுகள்

...

## SLFRS 4 நியமத்தை SLFRS 9 நியமத்துடன் பிரயோகித்தல்

### SLFRS 9 நியமத்திற்கான தற்காலிக விலக்குகள்

46 அக்டோபர் 2011 வழங்கப்பட்ட SLFRS 9 *நிதி சாதனங்கள்* நியமத்தை SLFRS 4 *காப்புறுதி ஒப்பந்தங்கள்* (SLFRS 4 நியமத்துக்கான திருத்தங்கள்) நியமத்துடன் பிரயோகித்தல், பந்திகள் 3 மற்றும் 5 இனை திருத்தியும், பந்திகள் 20A– 20Q, 35A மற்றும் 39B–39J அதனுடன் சேர்த்தும், பந்திகள் 20, 20K, 20N மற்றும் 39A ஆகிய பந்திகளின் பின்னர் தலைப்புக்களை சேர்த்தும் உள்ளது. விசேட தேர்வுப்பிரமாணங்களைத் திருப்தி செய்த உரிமங்கள் SLFRS 9 நியமத்திலிருந்து தற்காலிக விலக்குகளை பெறுவதற்காக அனுமதிக்கும் இத்தகைய திருத்தங்களை 1 ஜனவரி 2018 அன்று அல்லது அதற்குப் பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கைகள் காலப்பகுதிக்கு பயன்படுத்தும்.

47 பந்திகள் 39B–39J இனால் தேவைப்படுத்தப்படும் தகவல்களை வெளிப்படுத்தும் உரிமமானது, அத்தகைய தேவைப்படுத்தல்களுக்கு அவசியமான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான SLFRS 9 நியமத்தில் காணப்படும் இடைக்கால ஏற்பாடுகளை பயன்படுத்தும். அந்த நோக்கத்திற்காக ஆரம்ப பிரயோகத் திகதியானது 1 ஜனவரி 2018 அன்று அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் முதலாவது ஆண்டு காலப்பகுதியாக கொள்ளப்படும்.

48 அக்டோபர் 2011 இல் வழங்கப்பட்ட SLFRS 9 *நிதிச்சாதனங்கள்* நியமத்தை SLFRS 4 *காப்புறுதி ஒப்பந்தங்கள்* (SLFRS 4 நியமத்துக்கான திருத்தங்கள்) உடன் பிரயோகித்தலானது, பந்திகள் 3 மற்றும் 5 இனை திருத்தியும், பந்திகள் 35A – 35N மற்றும் 39K – 39M இனை சேர்த்தும், பந்திகள் 35A, 35K, 35M மற்றும் 39J க்கு பின்னால் தலைப்புக்களை சேர்த்தும் உள்ளது. காப்புறுதியாளர் மேலடுக்கு அணுகுமுறையைப் பயன்படுத்த அனுமதிக்கும் இத்தகைய திருத்தங்களை உரிமம்

முதன்முதலாக SLFRS 9 நியமத்தினைப் பயன்படுத்தும்போது பிரயோகிக்கும் (பந்தி 35C இனைப் பார்வையிடுக)

49 மேலடுக்கு அணுகுமுறையைப் பயன்படுத்துவதற்குத் தேர்ந்தெடுக்கும் உரிமம்:

a. அந்த அணுகுமுறையை முன்பிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் வகைப்படுத்திய நிதிச் சொத்துக்களுக்கு SLFRS 9க்கு மாறும்போது பிரயோகிக்கும். அந்த வகையில், உதாரணமாக, வகைப்படுத்திய நிதிச் சொத்துக்களுக்கு SLFRS 9 நியமத்தைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்பட்ட சீர்மதிப்பு மற்றும் LKAS 39 நியமத்தைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்பட்ட முன்கொண்டுசெல்லல் பெறுமதி ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாட்டுக்கு சமமான தொகையினை திரண்ட ஏனைய முற்றடக்க வருமானத்தின் ஆரம்ப மீதியில் சீராக்கம் செய்யும்.

b. உரிமம் SLFRS 9 இனைப் பயன்படுத்தி, ஒப்பீட்டுத் தகவலை மீள்கூற்று செய்யின் மாத்திரமே மேலடுக்கு அணுகுமுறையை பிரதிபலிக்கும் வகையில் ஒப்பீட்டுத் தகவலை மறுசீரமைக்கும்.

**SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம்* நியமத்துக்கான திருத்தங்கள்**

பந்திகள் 26, 27 மற்றும் 29 ஆகியன திருத்தப்பட்டுள்ளன. நீக்கப்பட்ட உரை குறுக்குக்கோடிட்டு வெட்டப்பட்டுள்ளதுடன் புதிய உரை கீழ்க்கோடிடப்பட்டுள்ளது. பந்திகள் 28 மற்றும் 30 ஆகியன திருத்தப்படவில்லை, எனினும் விளங்கிக்கொள்ள இலகுவாக அவை உள்ளடக்கப்பட்டுள்ளன.

**தெளிவாகக் குறிப்பிட்ட பொருட்கள் அல்லது சேவைகள்**

26 ஒப்பந்தத்தைப் பொறுத்து, உறுதி வழங்கிய பொருட்கள் அல்லது சேவைகள் பின்வருவனவற்றவை உள்ளடக்கலாம், ஆனால் அவற்றிற்கு மட்டுப்படுத்தப்படவில்லை:

*(a)* உரிமம் ஒன்றினால் உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படும் பொருட்கள் (உதாரணமாக, உற்பத்தியாளர் ஒருவரது இருப்புக்கள்)

*(b)* உரிமம் ஒன்றினால் கொள்வனவு செய்த பொருட்களின் மீள்விற்பனை (உதாரணமாக, சில்லறை வியாபாரி ஒருவரது விற்பனைப் பொருட்கள்)

*(c)* உரிமம் ஒன்றினால் கொள்வனவு செய்த பொருட்கள் அல்லது சேவைகளின் உரிமைகளின் மீள்விற்பனை (உதாரணமாக, பந்தி B34-B38 இல் விபரிக்கப்பட்டவாறு, முதல்வராக செயற்படும் உரிமம் ஒன்றினால் அனுமதிச்சீட்டு ஒன்று மீள் விற்பனை செய்யப்படல்)

*(d)* ஒப்பந்தரீதியான இணங்கப்பட்ட செயற்பாடு (செயற்பாடுகள்) ஒன்றினை வாடிக்கையாளருக்காக நிறைவேற்றுதல்

*(e)* வழங்குவதற்குத் தயாராக வைத்திருக்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளின் வழங்கல் (உதாரணமாக, கிடைக்கக்கூடியதாக இருக்கும்போது வழங்கப்படத்தக்க மென்பொருள் பிரயோகம் ஒன்றுக்கான பிரத்தியேகமாகக் குறிப்பிட முடியாத மேம்படுத்தல்) அல்லது வாடிக்கையாளர் தீர்மானிக்கும் காலத்தில் பொருட்கள் அல்லது சேவைகள் கிடைக்கும் படியாகச் செய்தல்

*(f)* வாடிக்கையாளருக்குப் பொருட்கள் அல்லது சேவைகள் மாற்றுவதற்கான மற்றொரு தரப்பினரை ஒழுங்கு செய்வதற்கான சேவையினை வழங்குதல் (உதாரணமாக, பந்தி B34-B38 இல் விபரிக்கப்பட்டவாறாக மற்றொரு தரப்பினரின் முகவராக செயற்படல்)

*(g)* வாடிக்கையாளர் தமது வாடிக்கையாளருக்கு வழங்கக்கூடிய அல்லது மீள் விற்பனை செய்யக் கூடிய பொருட்கள் அல்லது சேவைகளின் உரிமையினை வாடிக்கையாளர்களுக்கு வழங்குதல்

(உதாரணமாக, மீள் விற்பனையாளர்களுக்கு உற்பத்தி ஒன்றை விற்பனை செய்யும் உரிமம் அந்த உற்பத்தியை மீள் விற்பனையாளரிடமிருந்து கொள்வனவு செய்யும் தரப்பினர் ஒருவருக்கு மேலதிக பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றுவதற்கு உறுதி வழங்குதல்)

*(h)* வாடிக்கையாளர் சார்பாக சொத்து ஒன்றினை நிர்மாணித்தல், உற்பத்தி செய்தல் அல்லது மேம்படுத்தல்

*(i)* அனுமதிப்பத்திரம் வழங்குதல் (பந்தி B52-B63 இனைப் பார்க்கவும்)

*(j)* மேலதிக பொருட்கள் அல்லது சேவைகளை கொள்வனவு செய்வதற்கான தேர்வினை வழங்குதல் (பந்தி B39-B43 இல் குறிப்பிடப்பட்டவாறு, அவ்வாறான தேர்வுகள் வாடிக்கையாளருக்கு பொருண்மையான உரிமைகளை வழங்கும் போது)

27 பின்வரும் இரு தேர்வுப்பிரமாணங்கள் திருப்தி செய்யப்படும்போது, வாடிக்கையாளர் ஒருவருக்கு உறுதிவழங்கிய பொருட்கள் அல்லது சேவைகள் தெளிவாக வேறுபடுத்தக்கூடியதாக கருதப்படும்:

*a)* வாடிக்கையாளர் அப்பொருட்கள் அல்லது சேவைகளில் இருந்து நேரடியாகவோ அல்லது வாடிக்கையாளருக்கு தயார் நிலையில் கிடைக்கக்கூடிய வளங்களுடன் கூடியதாகவோ பயன்பெறக் கூடியதாக இருத்தல் (பொருட்கள் அல்லது சேவைகளைத் திறமையாகத் தெளிவாகத் தெரியப்படுத்தல்)

*b)* வாடிக்கையாளருக்குப் பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றுவதற்கான உரிமத்தின் உறுதி வழங்கலானது ஒப்பந்தத்தின் ஏனைய உறுதி வழங்கல்களிலிருந்து வேறுபடுத்தி அடையாளம் காணக்கூடியதாகக் காணப்படல் (ஒப்பந்தத் தருணத்தில் பொருட்கள் அல்லது சேவைகளின் மாற்றலுக்கான உறுதியளிப்பு தெளிவாகத் தெரியும்படி வேறுபடுத்தப்படக் கூடியதாக இருத்தல்)

28 குறித்த பொருட்கள் அல்லது சேவைகள் பயன்படுத்தப்படக் கூடியதாகவோ, நுகரப்படக் கூடியதாகவோ, ஈற்றுப் பெறுமதியிலும் பார்க்கக் கூடுதலான பெறுமதியில் விற்கப்படக் கூடியதாகவோ அல்லது வேறு வழிகளில் பொருளாதாரப் பயன்பாட்டை வழங்கக்கூடிய வகையில் வைத்திருக்கப்பட முடியுமெனில், பந்தி 27க்கு அமைவாக வாடிக்கையாளர் அப்பொருட்கள் அல்லது சேவைகளில் இருந்து பயன்பெறக் கூடியதாக இருக்கும். சில பொருட்கள் அல்லது சேவைகளுக்கு, வாடிக்கையாளர் குறித்த பொருட்கள் சேவைகளில் இருந்து நேரடியாகப் பயன்பாட்டைப் பெறக் கூடியதாக இருக்கும். ஏனைய சில பொருட்கள் அல்லது சேவைகளுக்கு வாடிக்கையாளர் தயார்நிலையில் கிடைக்கக்கூடிய ஏனைய வளங்களுடன் இணைந்த விதமாகவே பயன்பெறக் கூடியதாக இருக்கும். தயார் நிலையில் கிடைக்கக் கூடிய வளம் என்பது வேறாக விற்கப்படும் (குறித்த உரிமத்தினாலோ அல்லது வேறு உரிமத்தினாலோ) பொருள் அல்லது சேவையினை அல்லது வாடிக்கையாளர் எற்கனவே உரிமத்திடம் இருந்து பெற்றுக்கொண்ட (ஒப்பந்தத்தின் அடிப்படையில் உரிமம் ஏற்கனவே மாற்றியிருந்த பொருட்கள் அல்லது சேவைகள் உள்ளடங்கலாக) அல்லது ஏனைய வகையான ஊடுசெயல்கள் அல்லது நிகழ்வுகளில் இருந்தான வளத்தினைக் குறிப்பிடும். பல்வேறு காரணிகள் வாடிக்கையாளர் அப்பொருட்கள் அல்லது சேவைகளில் இருந்து நேரடியாகவோ அல்லது தயார் நிலையில் கிடைக்கக்கூடிய வளங்களுடன் கூடியதாகவோ பயன்பெறக் கூடியதாக இருத்தலுக்கான சான்றினை வழங்கக்கூடும். உதாரணமாக, உரிமம் வழக்கமாகவே பொருள் அல்லது சேவை ஒன்றினைத் தனியாக விற்பனை செய்தலானது வாடிக்கையாளர் அப்பொருட்கள் அல்லது சேவைகளில் இருந்து நேரடியாகவோ அல்லது தயார் நிலையில் கிடைக்கக்கூடிய வளங்களுடன் கூடியதாகவோ பயன்பெறக் கூடியதாக இருத்தலை சுட்டிக் காட்டும்.

29 உரிமத்தின் பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றுவதற்கு உறுதியளித்தலானது பந்தி 27(b) க்கு அமைவாக தனியாக அடையாளம் காணத்தக்கதா என்பதை மதிப்பிடுவதில், ஒப்பந்தத்தின் எல்லைக்கு உட்பட்ட வகையில் உறுதியளித்தலின் இயல்பானது குறித்த ஒவ்வொரு பொருட்கள் அல்லது சேவைகளைத் தனியாகவா அல்லது அதற்குப் பதிலாக இணைந்த உருப்படிகளாகவா அல்லது உறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் உள்ளீடுகளாகவா மாற்றுவதற்கானது என்பதைத் தீர்மானித்தலே நோக்கமாகும். உரிமம் ஒன்றின் வாடிக்கையாளர் ஒருவருக்கு பொருள் அல்லது சேவையை பொருட்கள் அல்லது சேவைகளை மாற்றுவதற்கான ~~உறுதி வழங்கல் ஒன்றினை~~ ஒன்றுக்கு மேற்பட்ட உறுதிவழங்கல்களை சுட்டிக் காட்டக்கூடிய காரணிகள் ~~(பந்தி 27 (b) க்கு அமைவாக)~~ பின்வருவனவற்றை உள்ளடக்கும், ஆனால் இவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை:

*a)* உரிமமானது ~~வாடிக்கையாளருக்கு~~ உறுதி வழங்கப்பட்ட இணைந்த வெளியீட்டினை அல்லது வெளியீடுகளை வழங்குவதற்காக, ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்ட ~~பொருள் அல்லது சேவையை~~ பொருட்கள் அல்லது சேவைகளை ஏனைய பொருட்கள் அல்லது சேவைகளுடன் ஒன்றிணைக்கும் முக்கியமான சேவையினை வழங்குவதில்லை வழங்கும். அதாவது, உரிமமானது வாடிக்கையாளரினால் குறித்துரைக்கப்பட்ட இணைந்த வெளி~~யீட்டை அல்லது~~ வெளியீடுகளை உற்பத்தி செய்ய அல்லது விநியோகம் செய்வதற்காக ~~பொருள் அல்லது சேவையை~~ பொருட்கள் அல்லது சேவைகளை உள்ளீடாகப் பயன்படுத்தும்வதில்லை. இணைந்த வெளியீடு அல்லது வெளியீடுகள் என்பது ஒன்றுக்கு மேற்பட்ட கட்டங்களான மூலக்கூறுகள் அல்லது அலகுகளை உள்ளடக்கும்.

*b)* ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ~~பொருள் அல்லது சேவை~~ பொருட்கள் அல்லது சேவைகள் ஒப்பந்தத்தில் ~~உறுதியளிக்கப்பட்ட~~ மற்றொரு ~~பொருள் அல்லது சேவையினை~~ முக்கியமான வகையில் மாற்றம் செய்வதில்லை செய்யும் அல்லது ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஏனைய பொருட்கள் அல்லது சேவைகளினால் திருத்தவோ மாற்றம் செய்யவோ படலாம்.

*c)* ~~பொருள் அல்லது சேவையானது ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்ட ஏனைய பொருட்கள் அல்லது சேவைகளுடன் பெருமளவில் தொடர்புபட்டதாகவோ அல்லது தங்கியுள்ளதாகவோ இருப்பதில்லை. உதாரணமாக, உண்மையில் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட மற்றைய பொருட்கள் அல்லது சேவைகளில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தாது குறித்த பொருள் அல்லது சேவையினை வாடிக்கையாளர் கொள்வனவு செய்யாதிருப்பதானது குறித்த பொருள்~~ அல்லது சேவையானது ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்ட ஏனைய பொருட்கள் அல்லது சேவைகளுடன் பெருமளவில் தொடர்புபட்டதாகவோ அல்லது தங்கியிருப்பதாகவோ இல்லாது இருப்பதனை சுட்டிக்காட்டும். பொருட்கள் அல்லது சேவைகள் பெருமளவில் ஒன்றிலொன்று தங்கியிருப்பதாகவோ அல்லது தொடர்புபட்டதாகவோ இருக்கும். வேறு சொற்களில் கூறினால், ஒவ்வொரு பொருட்கள் அல்லது சேவைகளும் ஒப்பந்தத்தில் உள்ள மற்றொரு பொருள் அல்லது சேவையினால் பாதிக்கப்படுகின்றன. உதாரணமாக, சில சந்தர்ப்பங்களில், உரிமம் ஒவ்வொரு பொருட்கள் அல்லது சேவைகளையும் சுயாதீனமாக மாற்றம் செய்வதன் மூலம் உறுதிவழங்கலைத் திருப்தி செய்ய முடியாத காணப்படுவதனால், இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள் ஒன்றினால் ஒன்று முக்கியமான வகையில் தாக்கமடையும்.

30 உறுதியளிக்கப்பட்ட பொருள் அல்லது சேவை ஒன்றானது தெளிவாகத் தெரியாத போது, வேறான பொருட்கள் அல்லது சேவைகளின் தொகுப்பு தெளிவாகத் தெரியும்படி அடையாளம் காணாத வரையில் உரிமம் அப்பொருட்கள் அல்லது சேவையினை உறுதியளிக்கப்பட்ட ஏனைய பொருட்கள் அல்லது சேவைகளுடன் ஒன்றிணைத்தல் வேண்டும். சில சந்தர்ப்பங்களில், உரிமம் ஒப்பந்தமொன்றிலே உறுதியளித்த அனைத்துப் பொருட்கள் அல்லது சேவைகள் யாவற்றினையும் ஒரே செயல் நிறைவேற்றுக் கடப்பாடாக கணக்கிடப்படக்கூடும்.

| |
|---|
| பின்னிணைப்பு B யில் பந்திகள் B1, B34–B38, B52–B53 மற்றும் B58 ஆகியன திருத்தப்பட்டுள்ளதுடன், பந்திகள் B34A, B35A, B35B, B37A, B59A, B63A மற்றும் B63B ஆகியன சேர்க்கப்பட்டுள்ளன. பந்தி B57 நீக்கப்பட்டுள்ளது. பந்திகள் 33A மற்றும் 33E ஆகியவற்றுக்கு முன்பான தலைப்புக்கள் சேர்க்கப் பட்டுள்ளது. நீக்கப்பட்ட உரை குறுக்குக் கோடிட்டு வெட்டப் பட்டுள்ளதுடன் புதிய உரை கீழ்க் கோடிடப்பட்டுள்ளது. பந்திகள் B54–B56, B59 மற்றும் B60–B63 ஆகியன திருத்தப்படவில்லை, எனினும் இலகுவான குறிப்புக்காக அவை உள்ளடக்கப்பட்டுள்ளன. |

## பின்னிணைப்பு B பிரயோக வழிகாட்டல்

…

B1 இந்தப் பிரயோக வழிகாட்டல் பின்வரும் வகைகளாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது:

*(a)* காலப்போக்கில் நிறைவு செய்யப்படும் செயல்நிறைவேற்று கடப்பாடுகள் (பந்திகள் B2-B13)

*(b)* ஒரு செயல்நிறைவேற்று கடப்பாட்டின் முழுமையான திருப்தி தொடர்பான கட்டத்தை அளவிடுவதற்கான முறைமைகள் (பந்திகள் B14-B19)

*(c)* திருப்புவதற்கான உரிமையுடன் கூடிய விற்பனை (பந்திகள் B20-B27)

*(d)* உத்தரவாதங்கள் (பந்திகள் B28-B33)

*(e)* முதல்வர் எதிர் முகவர் தொடர்பான விடயங்கள் (பந்திகள் B34-B38)

*(f)* மேலதிக பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான வாடிக்கையாளர் தெரிவுகள் (பந்திகள் B39-B43)

*(g)* வாடிக்கையாளர்களது பயன்படுத்தப்படாத உரிமைகள் (பந்திகள் B44-B47)

*(h)* மீளளிக்கப்படாத வெளிப்படையான கட்டணங்கள் (மற்றும் அது தொடர்பான சில கிரயங்கள்) (பந்திகள் B48-B51)

*(i)* உரிமப்பத்திர வழங்கல்(பந்திகள் B52-B63)

*(j)* மறுகொள்முதல் ஒப்பந்தங்கள் (பந்திகள் B64-B76)

*(k)* ஒப்படை ஒப்பந்தங்கள் (பந்திகள் B77-B78)

*(l)* பட்டியலிட்டு வைத்திருக்கும் ஒப்பந்தங்கள் (பந்திகள் B79-B82)

*(m)* வாடிக்கையாளர் ஏற்பு (பந்திகள் B83-B86) மற்றும்

*(n)* திரட்டப்படாத வருமானத்தின் வெளிக்காட்டல் (பந்திகள் B87-B89)

**முதல்வர் மற்றும் முகவர் தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டியவை**

B34 வாடிக்கையாளருக்கு பொருட்களை அல்லது சேவைகளை வழங்குவதில் மற்றொரு தரப்பினர் தொடர்புபட்டால், உரிமமானது உறுதி வழங்கலின் தன்மை குறிப்பிட்ட பொருட்கள் அல்லது சேவைகளை தாமே வழங்குவதற்கான செயல் நிறைவேற்றுக் கடப்பாடாக (அதாவது உரிமமே முதல்வராகுதல்) அல்லது அந்தப் பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்கு பிற தரப்பினரை ஏற்பாடு ~~செய்வதா பிற தரப்பினர் ஊடாக வழங்குவதா~~ (அதாவது உரிமம் ஒரு முகவராகுதல்) என்பதைத் தீர்மானித்தல் வேண்டும். வாடிக்கையாளர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஒவ்வொரு குறித்த பொருட்கள் அல்லது சேவைகள் வழங்குவதற்கும் உரிமம் முதல்வராகவோ அல்லது முகவராகவோ தொழிற்பட வேண்டும் என்பதை தீர்மானிக்கும். ஒவ்வொரு பொருள் அல்லது சேவையும் (அல்லது ஒரு தனியான பொதியான பொருட்கள் மற்றும் சேவைகள்) வாடிக்கையாளருக்கு வழங்குவதற்காக உறுதியளிக்கப்பட்ட தனியான பொருள் அல்லது சேவை ஆகும் (பந்தி 27 மற்றும் 30 இனைப் பார்வையிடுக). வாடிக்கையாளர் ஒருவருடனான ஒப்பந்தம் ஒன்று ஒன்றுக்கு மேற்பட்ட விசேடமான பொருள் அல்லது சேவையை உள்ளடக்குகின்ற போது உரிமம் சில வகையான பொருட்கள் அல்லது சேவைகளுக்கு முதல்வராகவும் ஏனைய வகைகளுக்கு முகவராக தொழிற்படமுடியும்.

B34A இந்த வகையான உறுதி வழங்கலில் இயல்பினை தீர்மானிப்பதற்காக (பந்தி 34 இல் விவரிக்கப்பட்டவாறு) உரிமம்

(a) வாடிக்கையாளருக்கு வழங்கப்படவுள்ள விசேடமான பொருட்கள் அல்லது சேவைகள் இனம் காணும் (இதற்கு உதாரணமாக மற்றொரு தரப்பினரால் வழங்கப்படவேண்டிய பொருள் அல்லது சேவைக்கான உரிமையினை குறிப்பிடலாம்) (பந்தி 26 இனைப் பார்வையிடுக), அத்துடன்

(b) குறித்த பொருள் அல்லது சேவை வாடிக்கையாளருக்கு மாற்றப்படுவதற்கு முன்பு உரிமம் அதனை கட்டுப்படுத்துகின்றதா என்பதை மதிப்பிடும். (பந்தி 33 இல் விபரிக்கப்பட்டவாறு)

B35 ~~வாடிக்கையாளருக்கு உறுதி வழங்கப்பட்ட குறித்த பொருட்கள் அல்லது சேவைகள் மாற்றப்பட~~ முன்னர் உரிமம் அவற்றைக் கட்டுப்படுத்தக் கூடியதாகக் காணப்படின், உரிமம் அது ஒரு ~~முதல்வராகும். எவ்வாறாயினும், சட்டபூர்வமான உரித்து வாடிக்கையாளருக்கு மாற்றப்படும்~~ முன்பு, ~~அந்த நேரத்தின்போது மாத்திரம் உற்பத்திகளுக்கான~~ பொருட்களுக்கான சட்டபூர்வமான ~~உரிமையினை உ~~ரிமம் பெற்றுக் கொண்டால், உரிமம் ஒரு முதல்வராக செயற்படுவது அது பொருட்கள் அல்லது சேவைகளைக் கட்டுப்படுத்துவது அவசியமானதல்ல. ஒப்பந்தத்தில் முதல்வராக இருக்கும் உரிமம் ஒன்று பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவதன் மூலம்

ஒரு செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டை தானாகவே திருப்தி செய்யலாம் அல்லது மற்றொரு தரப்பினரை (உதாரணமாக, ஒரு உபஒப்பந்ததாரர்) கொண்டு அதன் சார்பாக செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டின் சில அல்லது அனைத்துப் பகுதிகளையும் திருப்தி செய்து கொள்ளமுடியும். முதல்வராகவுள்ள உரிமம் தானாகவே செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டைத் திருப்தி செய்கின்ற போது, அந்த உரிமம் மாற்றம் செய்யப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கு ஈடாக உரிமை பெற்றுக்கொள்ளப்பட எதிர்பாக்கும் முழுமையான தொகையையும் வருமானமாக ஏற்பிசைவு செய்யும்.

B35A வாடிக்கையாளருக்கு பொருட்கள் சேவைகளை வழங்குவதற்கு மற்றொரு தரப்பினர் ஈடுபடும்போது முதல்வராக தொழிற்படும் உரிமம் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றினது கட்டுப்பாட்டைப் பெற்றுக்கொள்ளும்:

(a) வாடிக்கையாளருக்கு மாற்றம் செய்யப்பட்ட தரப்பினரிடம் இருந்து ஒரு பொருள் அல்லது ஒரு சொத்தினை

(b) குழுமத்தின் சார்பாக வாடிக்கையாளருக்கு ஒரு சேவையினை வழங்குமாறு குறித்த பற்றிய தரப்பினரை நிர்வகிப்பதற்கான இயலுமையை வழங்கும் பற்றிய தரப்பினரால் மேற்கொள்ளப்பட வேண்டிய சேவைக்கான உரிமை

(c) வாடிக்கையாளருக்கு குறித்த பொருளை அல்லது சேவையை வழங்குவதற்காக அதனை வழங்கும் மற்றொரு தரப்பினரால் அதனுடன் இணைக்கப்பட வேண்டிய ஒரு பொருள் அல்லது சேவை. உதாரணமாக உரிமம் பொருட்கள் அல்லது சேவைகளை ஒன்றிணைக்க வேண்டிய ஒரு முக்கியமான சேவையை வழங்க பந்தி (பந்தி 29 இனைப் பார்வையிடுக) மற்றொரு தரப்பு அதனை வாடிக்கையாளருடன் ஒப்பந்தம் செய்யப்பட்ட பொருள் அல்லது சேவையாக வழங்க, குறித்த பொருள் அல்லது சேவை வாடிக்கையாளருக்கு மாற்றப்படுவதற்கு முன்பாக உரிமம் அதனை கட்டுப்படுத்தும். ஏனெனில் குறித்த பொருள் அல்லது சேவையின் கட்டுப்பாட்டை முதலில் உரிமம் பெற்றுக்கொண்டு இது மற்றைய தரப்பில் இருந்து பெறப்படும் பொருட்கள் அல்லது சேவைகளை உள்ளடக்கும். அதன்பின் விசேடமாக குறிக்கப்பட்ட பொருள் அல்லது சேவை இணைந்த வகையிலான பயன்பாட்டை நிர்வகிக்கும்.

B35B முதல்வராக தொழிற்படும் உரிமம் தனது செயல் நிறைவேற்று கடப்பாட்டை திருப்தி செய்யும் போது குறித்த பொருள் அல்லது சேவையின் பரிமாற்றத்திற்கு உரிமம் பெற்றுக் கொள்ளவுள்ள மொத்தத்தொகையின் பதிலிறுக்கிப் பெறுமதியில் வருமானத்தை ஏற்பிசைவு செய்யும்.

B36 குறித்த பொருள் அல்லது சேவை வழங்குவதற்கான ஏற்பாட்டை மற்றொரு தரப்பினர் ஊடாக மேற்கொள்வது உரிமத்தின் செயல்நிறைவேற்றுக் கடப்பாடு எனின், உரிமம் ஒரு முகவர் ஆகும். முகவராகவுள்ள உரிமம் மற்றொரு தரப்பினரால் வழங்கப்படும் குறித்த பொருட்கள் அல்லது சேவைகளை அவை வாடிக்கையாளருக்கு மாற்றப்படுவதற்கு முன்னர் கட்டுப்படுத்துவதில்லை. ஒரு முகவராக செயற்படும் உரிமம் தனது செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டைத் திருப்தி செய்யும் போது, உரிமம் குறித்த பொருள் அல்லது சேவையை வாடிக்கையாளருக்கு மாற்றுவதற்காக ஏற்பாடு செய்வதற்காகக் கிடைக்கத் தக்கதாகவுள்ள எந்தவொரு கட்டணம் அல்லது தரகுத் தொகையை வருமானமாக ஏற்பிசைவு செய்யும். உரிமம் பெறும் கட்டணம் அல்லது தரகுத் தொகை என்பது வாடிக்கையாளருக்கு மாற்றப்பட்ட பொருள் அல்லது சேவைக்கு ஈடாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட பதிலிறுக்கிப் பெறுமதியில், மற்றைய தரப்பினருக்கு குறித்த பரிமாற்றம் தொடர்பாக செலுத்த வேண்டிய தொகைகள் கழிக்கப்பட்ட நிகர தொகை ஆகும்.

B37 உரிமம் ஒரு முகவராக இருப்பதை அடையாளம் காட்டத்தக்க காட்டிகள் (குறித்த பொருள் அல்லது சேவை வாடிக்கையாளருக்கு மாற்றப்பட முன்னதாக பொருள் அல்லது சேவையைக் கட்டுப்படுத்த முடியாது இருப்பதற்கான) கட்டுப்படுத்துவதனை காட்டத்தக்க காட்டிகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியது, ஆனால் அவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்படவில்லை:

(a) ஒப்பந்தத்தை குறித்த பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்கான உறுதிவழங்கலை நிறைவேற்றுவதற்கு மற்றொரு தரப்பு உரிமம் முதன்மையான பொறுப்பைக் கொண்டிருத்தல். இது பொதுவாக, குறித்த பொருட்கள் அல்லது சேவைகளின் ஏற்றுக் கொள்ளத்தக்க தன்மைக்கான பொறுப்பை உள்ளடக்கும் (உதாரணமாக, வாடிக்கையாளர் குறிப்புரைகளைத் திருப்தி செய்யும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான முதன்மையான பொறுப்பு). உரிமமே குறித்த பொருட்கள் சேவைகளுக்கான உறுதிவழங்கலை நிறைவு செய்வதற்கான பிரதானமான பொறுப்பைக் கொண்டிருப்பின், பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவதில் ஈடுபடும் மற்றைய தரப்பினர் உரிமத்தின் சார்பாகவே செயற்படுவதாகக் குறிகாட்டப்படும்.

(b) ஒரு வாடிக்கையாளரால் குறித்த பொருள்களை வாங்குவதற்காகக் கட்டளையிடப்பட முன்பாகவோ, அதற்கு பின்பாகவோ, கப்பல் போக்குவரத்தின் போதோ அல்லது திரும்பலின் போதோ ஒரு வாடிக்கையாளருக்கு குறித்த பொருட்கள் மாற்றப்பட முன்னர் அல்லது அவற்றின் கட்டுப்பாடு வாடிக்கையாளருக்கு மாற்றப்பட முன்னர் உரிமத்துக்கு இருப்புத் தொடர்பான இடர்கள் காணப்படாமை, காணப்படும் போது (உதாரணமாக, வாடிக்கையாளர் திருப்பி அனுப்பும் உரிமையைக் கொண்டுள்ள போது), உதாரணமாக, உரிமம் வாடிக்கையாளருடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கு முன்பாகவே பொருட்களைப் பெற்றுக் கொண்டால் அல்லது பெற்றுக்கொள்ளக் கடமைப்பட்டால், அது பொருட்கள் வாடிக்கையாளருக்கு மாற்றப்பட முன்னர் அவற்றுடன் தொடர்புபட்ட பயன்களை நிர்வகிக்கவும் கணிசமாக மீதமுள்ள பயன்பாட்டின் முழுமையான அளவையும் பெற்றுக் கொள்ளும் இயலுமை உரிமத்துக்குக் காணப்படுதல் குறிகாட்டப்படும்.

(c) பிற தரப்பினரின் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலைகளை நிர்ணயிப்பதில் உரிமம் உரிமையினைக் கொண்டிராமை, அதன் காரணமாக அந்த பொருட்கள் அல்லது சேவைகளில் உரிமம் இருந்து பெறக்கூடிய நன்மை குறைவாக உள்ளமை. குறித்த பொருள் அல்லது சேவையின் விலையை உருவாக்குவதற்கான தேர்வுரிமையை உரிமம் கொண்டிருத்தல். குறித்த பொருள் அல்லது சேவைக்காக வாடிக்கையாளர் செலுத்த வேண்டிய விலையை உருவாக்குதலானது, பொருட்கள் வாடிக்கையாளருக்கு மாற்றப்பட முன்னர் அவற்றுடன் தொடர்புபட்ட பயன்களை நிர்வகிக்கவும் கணிசமாக மீதமுள்ள பயன்பாட்டின் முழுமையான அளவையும் பெற்றுக் கொள்ளும் இயலுமை உரிமத்துக்குக் காணப்படுதலைக் குறிகாட்டும். எனினும், சில சந்தர்ப்பங்களில் முகவரொருவர் விலையை உருவாக்குவதற்கான தேர்வுரிமையைக் கொண்டிருக்கலாம். உதாரணமாக, மற்றைய தரப்பினரால் வாடிக்கையாளருக்கு வழங்கப்படவேண்டிய பொருட்கள் அல்லது சேவைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலம் மேலதிக வருமானங்களை உழைக்கும் நாட்டத்தில் விலையை உருவாக்குவதற்கான நெகிழ்ச்சித் தன்மையை முகவர் கொண்டிருக்கக்கூடும்.

(d) உரிமத்தின் கைமானமானது ஒரு தரகுக்கூலி வடிவில்உள்ளமை மற்றும்

(e) மற்றைய தரப்பினர் உரிமத்துக்கு பொருள் அல்லது சேவையை மாற்றியமையினால் பெறப்பட வேண்டிய கைமானம் தொடர்பாக ஏற்படும் கடன் இடர் உரிமத்துக்குக் காணப்படாமை

B37 A பந்தி B37 இல் காணப்படும் குறிகாட்டிகள் குறித்த பொருட்கள் அல்லது சேவைகள் மற்றும் ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் மற்றும் கட்டுரைகள் ஆகியவற்றின் அடிப்படையில் கட்டுப்பாட்டினை மதிப்பீடு செய்வதற்கு கூடுதலாக அல்லது குறைவாக பொருத்தமாகக் காணப்படுவதுடன், வேறுபட்ட குறிகாட்டிகள் வேறுபட்ட ஒப்பந்தங்களில் மிகவும் நியாயப்படுத்த தக்க சான்றுகளை வழங்கக்கூடும்.

B38 உரிமத்தின் செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகள் மற்றும் ஒப்பந்த உரிமைகள் ஆகியன ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதால் உரிமம் வாக்குறுதியளிக்கப்பட்ட குறித்த பொருட்கள் அல்லது சேவைகளை வாடிக்கையாளருக்கு மாற்றுவதற்கான செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டைத் திருப்தி செய்ய வேண்டிய கட்டாயம் இனி இல்லை (உரிமம் இனிமேலும் முதல்வராக செயற்படவில்லை) என மற்றொரு உரிமம் கருதிக் கொள்ளுமாயின், அந்த உரிமம் அந்த வருமானத்தை ஏற்பிசைவு செய்தல் ஆகாது. அதற்கு பதிலாக உரிமம் செயல்நிறைவேற்றுக் கடப்பாட்டை திருப்தி செய்து வருமானத்தை ஏற்பிசைவு செய்து கொள்வதா அல்லது குறித்த தரப்பினருக்கான ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொள்வதா (உரிமம் முகவராக தொழிற்படுவதா) என்பதை மதிப்பிடல் வேண்டும்.

**அனுமதிப்பத்திரம் அனுமதியளித்தல்**

B52 ஒரு அனுமதிப்பத்திர அனுமதியானது, உரிமம் ஒன்றின் புலமைச் சொத்து ஒன்றுக்கான வாடிக்கையாளரது உரித்தினை உருவாக்குகிறது. அனைத்து புலமைச் சொத்துக்களினதும் உரிமை அனுமதிப்பத்திரம் பின்வருவனவற்றினை உள்ளடக்கலாம், ஆனால் அவற்றுக்கு அத்தகைய உரிமை அனுமதிப்பத்திரங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டவை அல்ல.

(a) மென்பொருள் மற்றும் தொழில்நுட்பம்

(b) அசையும் படங்கள், இசை மற்றும் இதர வடிவங்களிலான ஊடகங்கள் மற்றும் பொழுதுபோக்கு

(c) அங்கீகார உரிமம் மற்றும்

(d) ஆக்கவுரிமைகள், வர்த்தகக்குறிகள் மற்றும் பதிப்புரிமை.

B53 ஒரு வாடிக்கையாளருக்கு உரிமை அனுமதிப்பத்திரம் (அல்லது அனுமதிப்பத்திரங்கள்) வழங்குவதற்கான ஒரு வாக்குறுதிக்கு மேலதிகமாக, ஒரு உரிமம் பிற பொருட்கள் அல்லது சேவைகளின் மாற்றலை வாடிக்கையாளருக்கு உறுதியளிக்கலாம். அந்த வாக்குறுதிகள் வெளிப்படையாக ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டவையாகவோ, உரிமத்தின் வழக்கமான வணிக நடைமுறைகளாக உள்ளார்ந்தமானதாகவோ, பிரசுரப்படுத்தப்பட்ட கொள்கைகளாகவோ அல்லது பிரத்தியேக கூற்றுக்களாகவோ இருக்கலாம் (பந்தி 24 ஐப் பார்க்கவும்). மற்ற வகையான ஒப்பந்தங்களைப் போல, ஒரு வாடிக்கையாளருடனான ஒப்பந்தம் பிற பொருட்கள் அல்லது சேவைகளை வழங்குவதற்கான வாக்குறுதிக்கு மேலதிகமாக, ஒரு உரிமை அனுமதிப்பத்திரத்தை (அல்லது அனுமதிப்பத்திரங்களை) வழங்குவதற்கான வாக்குறுதியையும் கொண்டிருக்கும் போது உரிமம் ஒவ்வொரு செயல்நிறைவேற்றுக் கடப்பாடுகளையும் அடையாளம் காண்பதற்காகப் பந்திகள் 22-30 இனைப் பிரயோகிக்கும்.

B54 பந்திகள் 26-30 க்கு அமைய அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான வாக்குறுதியானது ஒப்பந்தத்தில் வாக்குறுதியளிக்கப்பட்ட பிற பொருட்கள் அல்லது சேவைகளில் இருந்து வேறுபட்டதானதாக இல்லாவிடில், உரிமம் அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான வாக்குறுதியையும், வாக்குறுதியளித்த பிற பொருட்கள் மற்றும் சேவைகளையும் ஒரே செயல்நிறைவேற்றுக் கடப்பாடாக கணக்கு வைத்தல் வேண்டும். ஒப்பந்தத்தில் உறுதியளிக்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகள் உரிமை அனுமதிப்பத்திரம் வழங்கலில் இருந்து வேறுபடாத சந்தர்ப்பங்களுக்கான உதாரணங்கள் பின்வருமாறு:

(a) ஒரு தொட்டுணரக்கூடிய பொருளின் ஒருங்கிணைந்த முக்கிய பகுதியான அதன் ஆக்கக்கூறு ஒன்றை உருவாக்குவதற்கான அனுமதிப்பத்திரம் மற்றும் வாடிக்கையாளர் ஒரு தொடர்புடைய சேவையுடன் இணைத்து மட்டுமே பயனடையத்தக்க உரிமை

(b) அனுமதிப்பத்திரம் ஒன்று (அனுமதிப்பத்திரத்தை வழங்குவதன் மூலம், உள்ளடக்கத்தை அணுகுவதற்கான அனுமதியை வாடிக்கையாளருக்கு வழங்கத்தக்க இணையவழி சேவை).

B55 உரிமை அனுமதிப்பத்திரம் தனியானதான அல்லாதபோது, செயல்நிறைவேற்றுக் கடப்பாடானது (உறுதியளிக்கப்பட்ட உரிமை அனுமதிப்பத்திரம் உள்ளடங்கலாக) காலப்போக்கில் திருப்தி செய்யப்படுமா அல்லது குறித்த காலப்புள்ளி ஒன்றில் திருப்தி செய்யப்படுமா என்பதைத் தீர்மானிப்பதற்காக உரிமம் பந்திகள் 31-38 இனைப் பிரயோகிக்கும்.

B56 உரிமை அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான உறுதியானது, ஒப்பந்தத்தில் வாக்குறுதியளிக்கப்பட்ட பிற பொருட்கள் அல்லது சேவைகளில் இருந்து வேறுபட்டதாக இருந்தால், அதன்படி உரிமை அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கான உறுதிமொழி ஒரு தனித்த செயல்நிறைவேற்றுக் கடப்பாடாக உள்ள போது, வாடிக்கையாளருக்கு உரிமை அனுமதிப்பத்திரம் மாற்றப்படுவது காலப்போக்கிலா அல்லது ஒரு குறித்த காலப் புள்ளியிலா என்பதை உரிமம் தீர்மானிக்க வேண்டும். இதனைத் தீர்மானிப்பதில், வாடிக்கையாளருக்கு உரிமை அனுமதிப்பத்திரம் வழங்கும் உறுதிப்பாட்டின் தன்மையானது வாடிக்கையாளருக்குப் பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்றை வழங்குகிறதா என்பதை உரிமம் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்:

(a) உரிமை அனுமதிப்பத்திரத்தின் காலப்பகுதி முழுமையாக உரிமத்தின் புலமைச் சொத்தினை அவ்வாறே அணுகுவதற்கான உரிமை, அல்லது

(b) உரிமை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட காலப்பகுதியில் இருக்கின்றவாறாக உரிமத்தின் புலமைச் சொத்தினைப் பயன்படுத்துவதற்கான உரிமை.

**உரிமத்தின் வாக்குறுதியின் தன்மையை தீர்மானித்தல்**

B57 ~~ஒரு உரிமை அனுமதித்தினுடைய உரிமை அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான உறுதிமொழியானது, வாடிக்கையாளருக்கு புலமைச் சொத்தை அணுகுவதற்கான அல்லது பயன்படுத்துவதற்கான உரிமையை வழங்குகிறதா என்பதை தீர்மானிப்பதற்காக, உரிமமானது வாடிக்கையாளர் புலமைச் சொத்தின் பயன்பாட்டை நிர்வகித்து, உரிமை அனுமதிப்பத்திரத்தினால் அனுமதிக்கப்பட்ட ஒரு காலப்புள்ளியில் உரிமை அனுமதிப்பத்திரத்துடன் தொடர்புபட்ட சொத்தின் மீதமுள்ள கணிசமான பயன்பாடு முழுவதையும் பெற்றுக்கொள்ள முடியுமா என்பதைக்கருத்தில் கொள்ளுதல் வேண்டும். வாடிக்கையாளர் உரிமை கொண்ட புலமைச் சொத்தின் மீதான உரிமையானது உரிமை அனுமதிப்பத்திரக் காலப்பகுதியில் மாற்றமடைந்தால், வாடிக்கையாளர் புலமைச் சொத்தின் பயன்பாட்டை நிர்வகித்து, உரிமை அனுமதிப்பத்திரத்தினால் அனுமதிக்கப்பட்ட ஒரு காலப்புள்ளியில் உரிமை அனுமதிப்பத்திரத்துடன் தொடர்புபட்ட சொத்தின் கணிசமான பயன்பாடு முழுவதையும் பெற்றுக்கொள்ள முடியாது. உரிமம் புலமைச் சொத்துடன் தொடர்ச்சியாக ஈடுபட்டு இருக்கும்போது, வாடிக்கையாளர் உரிமை கொண்டுள்ள புலமைச் சொத்தில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டால், புலமைச் சொத்தானது மாற்றமடையும் (அத்துடன், வாடிக்கையாளர் உரிமை அனுமதிப்பத்திரத்தைக் கட்டுப்படுத்தும் காலம் தொடர்பான உரிமத்தின் மதிப்பீட்டையும் பாதிக்கும்). இத்தகைய சந்தர்ப்பங்களில், உரிமை அனுமதிப்பத்திரமானது, புலமைச் சொத்துக்களை அணுகுவதற்கான உரிமையினை வாடிக்கையாளருக்கு வழங்குகிறது. (பந்தி B58 ஐ பார்க்கவும்). இதற்கு மாறாக, உரிமை அனுமதிப்பத்திரத்தினால்வாடிக்கையாளருக்கு புலமைச் சொத்தின் மீது வழங்கப்பட்ட உரிமை மாறாது காணப்படின், வாடிக்கையாளர் உரிமை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட காலப்புள்ளியில், புலமைச் சொத்தின் பயன்பாட்டை நிர்வகித்து, உரிமை அனுமதிப்பத்திரத்தினால் அனுமதிக்கப்பட்ட ஒரு காலப்புள்ளியில் உரிமை அனுமதிப்பத்திரத்துடன் தொடர்புபட்ட சொத்தின் மீதமுள்ள கணிசமான பயன்பாடு முழுவதையும் பெற்றுக்கொள்ள முடியும் (பந்தி B61 ஐ பார்க்கவும்). இவ்வாறான நிலைமைகளில், உரிமத்தினால் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு நடவடிக்கையும் அதன் சொந்த சொத்தை மாத்திரமே (அதாவது, தொடர்புபட்ட புலமைச் சொத்து) மாற்றும். இது உரிமம் எதிர்கால உரிமை அனுமதிப்பத்திரங்களை விங்குவதற்கான இயலுமையைப் பாதிக்கும். எனினும், அந்த நடவடிக்கைகள் உரிமை அனுமதிப்பத்திரம் வழங்கும் அல்லது வாடிக்கையாளர் கட்டுப்படுத்தும் எதனையும் பாதிப்ப~~தில்லை. [நீக்கப்பட்டுள்ளது]

B58 அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கான உரிமத்தின் வாக்குறுதியின் தன்மையானது, பின்வரும் தேர்வுப்பிரமாணங்கள் செய்யப்பட்டிருப்பின், உரிமத்தின் புலமைச் சொத்தினை அணுகுவதற்கான உரிமையை வழங்குவதற்கான ஒரு வாக்குறுதியாகும்:

(a) உரிமமானது வாடிக்கையாளர் உரிமை கொண்டுள்ள புலமைச் சொத்தினைக் கணிசமாகப் பாதிக்கத்தக்க வகையில் செயற்பாடுகளை மேற்கொள்ளும் என ஒப்பந்தம் தேவைப்படுத்துதல் அல்லது வாடிக்கையாளர் நியாயமாக எதிர்பார்த்தல் (பந்தி B59 மற்றும் B59A இனைப் பார்க்கவும்),

(b) அனுமதிப்பத்திரத்தால் வழங்கப்பட்ட உரிமைகள் பந்தி B58 (அ) இல் அடையாளம் காணப்பட்ட உரிமத்தின் நடவடிக்கைகளால் நேர் அல்லது எதிர்மறையான விளைவுகளுக்கு உள்ளாகுதல், மற்றும்

(c) அந்த நடவடிக்கைகள் நிகழ்ந்தால் அது வாடிக்கையாளர்களுக்கு ஒரு பொருள் அல்லது சேவையை மாற்றுவதில் விளைவை ஏற்படுத்துவதில்லை (பந்தி 25 இனைப் பார்க்கவும்)

B59 உரிமமானது வாடிக்கையாளர் உரிமை கொண்டுள்ள புலமைச் சொத்தினைக் கணிசமாகப் பாதிக்கத்தக்க செயற்பாடுகளை மேற்கொள்ளும் என வாடிக்கையாளர் நியாயமாக எதிர்பார்ப்பை இனம்காட்டக்கூடிய காரணிகள் உரிமத்தின் வழக்கமாக வணிக செயற்பாடுகள், பிரசுரப்படுத்தப்பட்ட கொள்கைகள் அல்லது பிரத்தியேக கூற்றுக்கள் முதலானவற்றை உள்ளடக்கும். தீர்க்கமாகத் தீர்மானிக்கப்பட முடியாவிடினும் கூட, வாடிக்கையாளர் உரிமை கொண்ட புலமைச் சொத்து தொடர்புபட்ட, உரிமம் மற்றும் வாடிக்கையாளருக்கு இடையிலான பகிரப்பட்ட பொருளாதார நலன்கள் (உதாரணமாக, விற்பனை அடிப்படையிலான இறை) ஒன்றின் காணப்படுதலானது, உரிமம் புலமைச் சொத்தினைக் கணிசமாகப் பாதிக்கத்தக்க வகையிலான நடவடிக்கைகளை உரிமம் மேற்கொள்ளும் என வாடிக்கையாளர் நியாயமாக எதிர்பார்த்தலை அடையாளம் காட்டக்கூடும். அவ்வாறான அணுகுகையைப் பெறத்தக்க வகையில் செயல் நிறைவேற்றுக் கடப்பாட்டை நிறைவு செய்வதற்கான உரிமத்தின் முன்னேற்ற நிலைமையை அளவிடுவதற்கான பொருத்தமான முறையைத் தெரிவு செய்வதற்காக உரிமம் பந்திகள் 39-45 இனைப் பிரயோகிக்க முடியும்.

B59 A பின்வருவனவற்றில் ஏதேனும் ஒன்று இடம்பெறும்போது, உரிமத்தின் நடவடிக்கைகள், வாடிக்கையாளர் உரிமை கொண்டுள்ள புலமைச் சொத்துக்களைக் கணிசமாகப் பாதிக்கின்றன:

(a) அந்த நடவடிக்கைகள் புலமைச் சொத்துக்களின் வடிவத்தில் (உதாரணமாக, வடிவமைப்பு அல்லது உள்ளடக்கம்) அல்லது தொழிற்பாட்டு இயல்பில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது (உதாரணமாக, ஒரு செயல்பாடு அல்லது பணியைச் செய்யக்கூடிய இயலுமை), அல்லது

(b) புலமைச் சொத்திலிருந்து நன்மையைப் பெறுவதற்கான வாடிக்கையாளரின் இயலுமையானது அத்தகைய நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்டதாக அல்லது அவற்றில் தங்கியிருப்பதாக இருத்தல். உதாரணமாக, பண்டக்குறி ஒன்றிலிருந்தான நன்மையானது, புலமைச் சொத்தின் பெறுமதியை பேணுவதற்காகான அல்லது ஆதரவு வழங்குவதற்கான உரிமத்தின் தொடர்ந்து செல்லும் நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்டதாக அல்லது அவற்றில் தங்கியிருப்பதாக இருக்கும்.

ஆகையால், வாடிக்கையாளர் உரிமை கொண்டுள்ள புலமைச் சொத்துக்கள் கணிசமான நிலைத்த தன்மையான தொழிற்திறனைக் கொண்டிருப்பின், புலமைச் சொத்துக்களின் பயன்களின் கணிசமான பகுதியானது அத் தொழிற்படுதிறனில் இருந்து பெறப்பட்டதாகும். இதன் விளைவாக, புலமைச் சொத்தில் இருந்து நன்மையைப் பெறுவதற்கான வாடிக்கையாளரின் இயலுமையானது உரிமத்தின் நடவடிக்கைகள் கணிசமான அளவில் அவற்றின் வடிவம் மற்றும் தொழிற்படுதிறனில் மாற்றம் அடையாதவிடத்து, அத்தகைய நடவடிக்கைகளினால் கணிசமான அளவில் பாதிப்படையாததாகக் காணப்படும்.

B60 பந்தி B58 இல் உள்ள மூலப்பிரமாணங்கள் நிறைவேற்றப்பட்டால், உரிமமானது அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான வாக்குறுதியினை காலப்போக்கில் திருப்தி செய்யப்படும் செயல்நிறைவேற்றுக் கடப்பாடாகக் கணக்கு வைக்கும். ஏனெனில், உரிமம் தனது சொத்துக்கான அணுகுகையை வழங்கும் செயல் நிறைவேற்றுக் கடப்பாட்டை நிறைவு செய்யும் அதே நேரத்தில், வாடிக்கையாளர் அதன் நன்மையைப் பெற்று நுகர்வு செய்வார் (பந்தி 35 (a) இனைப் பார்க்கவும்).

B61 பந்தி B58 இன் மூலப்பிரமாணங்கள் நிறைவேற்றப்படாவிட்டால், உரிமத்தின் வாக்குறுதியானது, வாடிக்கையாளருக்கு உரிமை அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட காலப்புள்ளியில் புலமைச் சொத்து உள்ளவாறான நிலைமையில் (வடிவம் மற்றும் தொழிற்பாடுகளின் தன்மையில்) உரிமத்தின் புலமைச் சொத்தினைப் பயன்படுத்துவதற்கான உரிமையினை வழங்குதல் ஆகும். இதன் கருத்தானது, வாடிக்கையாளர் புலமைச் சொத்தின் பயன்பாட்டை நிர்வகித்து, உரிமை அனுமதிப்பத்திரம் உரிமையை அனுமதிக்கும் ஒரு காலப்புள்ளியில் உரிமை அனுமதிப்பத்திரத்துடன் தொடர்புபட்ட சொத்தின் மீதமுள்ள கணிசமான பயன்பாடு முழுவதையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதாகும். உரிமமானது உரிமை அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான வாக்குறுதியினை குறித்த காலப்புள்ளியில் திருப்தி செய்யப்படும் செயல்நிறைவேற்றுக் கடப்பாடாகக் கணக்கு வைக்கும். உரிமை அனுமதிப்பத்திரம் வாடிக்கையாளருக்கு மாற்றப்படும் காலப்பகுதியினைத் தீர்மானிப்பதற்காக, உரிமம் பந்தி 38 இனைப் பிரயோகிக்கும். இருப்பினும், உரிமத்தின் புலமைச் சொத்துக்களைப் பயன்படுத்துவதற்கான உரிமையை வழங்கும் உரிமை அனுமதிப்பத்திரங்களில், அந்த உரிமத்தின் புலமைச் சொத்துக்களில் இருந்து வாடிக்கையாளர் பயன்பெறும் காலத்தின் ஆரம்பத்திற்கு முன்னர் வருமானத்தை ஏற்பிசைவு செய்தல் ஆகாது. உதாரணமாக, மென்பொருள் ஒன்றின் உரிமை அனுமதிப்பத்திரக்காலம் வாடிக்கையாளர் ஒருவர் மென்பொருளை உடனடியாகப் பயன்படுத்தத்தக்க வகையில் உரிமம் குறியீட்டு வாசகத்தை வழங்குவதற்கு (அல்லது கிடைக்கத்தக்கதாக செய்வதற்கு) முன்னரே ஆரம்பித்திருப்பின், உரிமம் குறியீட்டு வாசகம் வழங்கப்படுவதற்கு முன்னர் வருமானத்தை ஏற்பிசைவு செய்தலாகாது.

B62 உரிமை அனுமதிப்பத்திரம் ஒன்று புலமைச் சொத்தின் அணுகைக்கான உரிமையை வழங்குகிறதா அல்லது உரிமத்தின் புலமைச் சொத்தைப் பயன்படுத்துவதற்கான உரிமையை வழங்குகிறதா என்பதைத் தீர்மானிக்கும்போது பின்வரும் காரணிகளைப் புறக்கணிக்க வேண்டும்.

(a) நேரம், புவிப்பிராந்தியம் அல்லது பயன்பாட்டு வரையறைகள் - அந்த வரையறைகளானவை, உரிமம் செயல் நிறைவேற்றுக் கடப்பாட்டை குறித்த காலப்புள்ளியிலா அல்லது காலப்போக்கிலா நிறைவேற்றுகிறது என்பதை வரையறுக்காது, வாக்குறுதி அளிக்கப்பட்ட உரிமை அனுமதிப்பத்திரத்தின் அம்சங்களை சொற்பொருள் விளக்கம் அளிக்கின்றன.

(b) புலமைச் சொத்துக்கான செல்லுபடியான ஆக்கவுரிமையைக் கொண்ட, அனுமதியற்ற பாவனையில் இருந்து அந்த ஆக்க உரிமையைப் பாதுகாக்கத்தக்க உரிமத்தால் வழங்கப்படும் உத்தரவாதங்கள் - ஆக்கவுரிமையைப் பாதுகாப்பதற்கு வாக்குறுதி ஒரு

செயல்நிறைவேற்றுக் கடப்பாடு ஆகாது. ஏனென்றால் ஆக்கவுரிமையைப் பாதுகாப்பதற்கான செயற்பாடு, உரிமத்தின் புலமைச் சொத்துக்களின் மதிப்பைப் பாதுகாப்பதுடன், மாற்றப்பட்ட உரிமை அனுமதிப் பத்திரமானது ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட அனுமதிப்பத்திரத்துக்கான குறிப்புரைகளை திருப்தி செய்கின்றது என்னும் உத்தரவாதத்தை வாடிக்கையாளருக்கு வழங்குகின்றது.

**விற்பனை அடிப்படையிலான அல்லது பயன்பாடு அடிப்படையிலான இறைகள்**

B63 56-59 ஆம் பந்திகளின் தேவைப்பாடுகளுக்கான போதிலும், உரிமமானது புலமைச் சொத்து ஒன்றின் உரிமை அனுமதிப்பத்திரத்தின் பரிமாற்றத்துக்கு ஈடாக வாக்குறுதி வழங்கப்பட்ட விற்பனை அடிப்படையிலான அல்லது பயன்பாட்டு அடிப்படையிலான இறைக்கான வருமானத்தை பின்வரும் நிகழ்வுகள் அல்லது அதற்குப் பின்னர் ஏற்பிசைவு செய்யும்.

(a) பிற்பட்ட கால விற்பனை அல்லது பயன்பாடு ஏற்படல், மற்றும்

(b) விற்பனை அடிப்படையிலான அல்லது பயன்பாட்டு அடிப்படையிலான இறைகள் வாக்குறுதி வழங்கப்பட்ட செயல் நிறைவேற்றுக் கடப்பாடுகளில் சில அல்லது அனைத்தும் திருப்தி செய்யப்படுதல் (அல்லது பகுதியளவில் திருப்தி செய்யப்படல்).

B 63A இறையானது புலமைச் சொத்தின் உரிமப்பத்திரத்துக்கு மாத்திரமானது எனில் அல்லது புலமைச் சொத்தின் உரிமப் பத்திரமானது இறைகள் தொடர்புபட்ட ஒரு முக்கியமான உருப்படியாகக் காணப்படுமிடத்து (உதாரணமாக, வாடிக்கையாளர் இறைகள் தொடர்புபட்ட பொருட்கள் அல்லது சேவைகளின் பெறுமதியிலும் பார்க்கக் கூடுதலான கணிசமான பெறுமதி மதிப்பிடுவார் என உரிமம் நியாயமான எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருக்கும்போது, புலமைச் சொத்தின் உரிமப்பத்திரமானது இறைகள் தொடர்புபட்ட ஒரு முக்கியமான உருப்படியாகக் காணப்படும்), பந்தி B63 யில் உள்ள விற்பனை அடிப்படையிலான அல்லது பயன்பாட்டு அடிப்படையிலான இறையானது பிரயோகிக்கத் தக்கதாகும்.

B 63B பந்தி B63A இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் திருப்தி செய்யப்பட்டதும், விற்பனை அடிப்படையிலான அல்லது பயன்பாட்டு அடிப்படையிலான இறைக்கான வருமானமானது பந்தி B63 க்கு இணக்கமாக முழுமையாக ஏற்பிசைவு செய்யப்படும். பந்தி B63A இல் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் திருப்தி செய்யப்படாதபோது, பந்திகள் இலுள்ள வேறுபட்ட கைமானங்கள் தொடர்பான தேவைப்பாடுகள் விற்பனை அடிப்படையிலான அல்லது பயன்பாட்டு அடிப்படையிலான இறைக்குப் பிரயோகிக்கத் தக்கதாகும்.

| |
|---|
| பின்னிணைப்பு C இல், பந்திகள் C2, C5 மற்றும் C7 ஆகியன திருத்தப்பட பந்திகள் C1B. C7A மற்றும் C8A ஆகியன சேர்க்கப்பட்டுள்ளன. நீக்கப்பட்ட உரைகள் வெட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன் புதிய உரைகள் அடிக் கோடிடப்பட்டுள்ளன. C3 மற்றும் C6 ஆகிய பந்திகள் திருத்தப்படாத போதும் இலகுவான உசாத்துணைக்காக அவ்வாறே உள்ளடக்கப்பட்டுள்ளன. |

**அமுலுக்கு வரும் திகதி**

C1B நவம்பர் 2016 இல் வழங்கிய SLFRS 15 *வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களில் இருந்தான வருமானம்* நியமத்துக்கான விளக்கவுரைகள் பந்திகள் 26, 27, 29, B1, B34–B38, B52–B53, B58, C2, C5 மற்றும் C7. இனை திருத்தியும், பந்தி B57 இனை நீக்கியும், பந்திகள் B34A, B35A, B35B, B37A, B59A, B63A, B63B, C7A மற்றும் C8A இனை சேர்த்தும் உள்ளது. உரிமமொன்று இந்தத் திருத்தங்களை 2018 சனவரி 01 அன்று அல்லது அற்குப் பின்னர் ஆரம்பிக்கும் ஆண்டு காலப் பகுதிகளுக்குப் பிரயோகிக்கும். முன்கூட்டிய பிரயோகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிமம் அத்தகைய திருத்தங்களை முன்னயை காலங்களுக்குப் பிரயோகிப்பின், அது அந்த உண்மையை வெளிக்காட்டல் வேண்டும்.

**இடைக்கால ஏற்பாடுகள்**

C2 பந்திகள் C3-C8 இல் குறிப்பிடப்பட்ட இடைக்காலத் தேவைப்பாடுகளுக்காக;

(a) ஆரம்ப பிரயோகத் திகதி என்பது, உரிமம் இந்த நியமத்தை முதன்முதலாகப் பிரயோகிக்கும் அறிக்கையிடல் காலப்பகுதியின் ஆரம்பம் ஆகும், மற்றும்

(b) ஒரு நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தம் என்பது, உரிமம் LKAS 11 நிர்மாண ஒப்பந்தங்கள், LKAS 18 வருமானம் மற்றும் தொடர்புடைய வியாக்கியானங்கள் ஆகியவற்றிற்கு இணங்க அடையாளம் காணப்பட்ட பொருட்களையும் அல்லது சேவைகளை மாற்றியுள்ள ஒப்பந்தமாகும்.

C3 உரிமம் பின்வரும் இரண்டு முறைகளில் ஏதேனும் ஒன்றைப் பயன்படுத்தி இந்த நியமத்தைப் பிரயோகிக்கும்:

(a) பந்தி C5 இல் குறிப்பிடப்பட்ட நடைமுறை விடயங்களுக்கு உட்பட்ட வகையில், LKAS 8 கணக்கீட்டு கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் வழுக்கள் நியமத்துக்கு அமைவாக முன்னிலைப்படுத்தப்பட்ட ஒவ்வொரு முன்னைய அறிக்கையிடல் காலப்பகுதிக்கும் முற்கால விளைவுள்ள வகையில், அல்லது

(b) C7-C8 பந்திகளுக்கு இணங்க, ஆரம்பப் பிரயோகத் திகதியில் ஏற்பிசைவு செய்யப்பட்டவாறாக இந்நியமத்தின் பிரயோகத்தின் ஆரம்பத்தில் திரண்ட விளைவுடன் முற்கால விளைவுள்ள வகையில்.

C4 LKAS 8 நியமத்தின் 28வது பந்தியின் தேவைகளைக் கருத்தில் கொள்ளாது, இந்த நியமம் முதன்முதலாக பிரயோகிக்கப்படும்போது, உரிமம் இந்நியமம் முதன்முதலாகப் பிரயோகிக்கப்பட்ட ஆண்டுக் காலத்தைத் தொடர்ந்து வரும் அடுத்த முதலாவது ஆண்டுக்கு (அடுத்து வரும் ஆண்டு) LKAS 8 நியமத்தின் 28(f) பந்தியினால் தேவைப்படுத்தப்படும் அளவுசார் தகவல்களை மாத்திரம் முன்னிலைப்படுத்தும். இது உரிமம் பந்தி C3 (அ) க்கு அமைவாக முற்கால விளைவுள்ள வகையில் நியமத்தைப் பிரயோகித்திருப்பின் மாத்திரமே முன்னிலைப்படுத்தப்படும். உரிமம் இத்தகவலைத் தற்போதைய மற்றும் ஒப்பீட்டுக் காலங்களுக்கும் முன்னிலைப்படுத்தலாம். எனினும் அவ்வாறு செய்ய வேண்டிய அவசியமில்லை.

C5 உரிமம் பந்தி C3(a) க்கு அமைய முன்பிருந்து நடைமுறைக்குவரும் வகையில் நியமத்தைப் பிரயோகிக்கும்போது, பின்வரும் அனுகூலமான நடைமுறைகளில் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவற்றைப் பயன்படுத்தலாம்:

(a) நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்கு, உரிமம் பின்வரும் ஒப்பந்தங்களை மீள்கூற்று செய்ய வேண்டிய அவசியமில்லை:

(i) அதே ஆண்டுக்குள் ஆரம்பித்து முடிவடையும் ஒப்பந்தங்கள்

(ii) <u>முன்னிலைப்படுத்தப்பட்ட மிக முந்திய ஆரம்ப காலத்தின் ஆரம்பத்தில் நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தங்கள்</u>

(b) மாறும் கைமானத்தைக் கொண்ட நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்கு, உரிமம் ஒப்பீட்டு அறிக்கையிடல் காலங்களில் மாறும் பதிலிறுக்கிப் பெறுமதியினை மதிப்பிடுவதற்குப் பதிலாக, ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்ட திகதியிலான ஊடுசெயல் விலையைப் பயன்படுத்தலாம். அத்துடன்,

<u>(c) முன்னிலைப்படுத்தப்பட்ட மிக முந்திய ஆரம்ப காலத்தின் ஆரம்பத்திற்கு முன்னரே திருத்தம் செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்கு, உரிமம் முன்பிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அத்தகைய ஒப்பந்தங்களை பந்தி 20– 21 க்கு அமைவாக மீள்கூற்று செய்ய வேண்டிய அவசியமில்லை. அதற்கு பதிலாக, கீழ்வரும் நிலைமைகளில் முன்னிலைப்படுத்தப்பட்ட மிக முந்திய ஆரம்ப காலத்தின் ஆரம்பத்திற்கு முன்னரே மேற்கொள்ளப்பட்ட அனைத்துத் திருத்தங்களினதும் திரண்ட விளைவுகளை பிரதிபலித்தல் வேண்டும்.</u>

<u>(i) திருப்தி செய்த மற்றும் திருப்தி செய்யப்படாத செயற்பாட்டுக் கடப்பாடுகளை இனம் காணுதல்.</u>

<u>(ii) ஊடுசெயல் விலையை தீர்மானித்தல், மற்றும்</u>

<u>(iii) ஊடுசெயல் விலையை திருப்தி செய்த மற்றும் திருப்தி செய்யப்படாத செயற்பாட்டுக் கடப்பாடுகளுக்கு ஒதுக்கீடு செய்தல்</u>

~~(c)~~(d) ஆரம்பப் பிரயோகத்துக்கு முன்னர் முன்னிலைப்படுத்தப்பட்ட அனைத்து அறிக்கையிடல் காலங்களுக்கும், உரிமம் மீதமுள்ள செயற்பாட்டுக் கடப்பாடுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஊடுசெயல்விலை மற்றும் உரிமம் அத்தொகையை எப்போது வருமானமாக ஏற்பிசைவு செய்ய எதிர்பார்க்கிறது என்னும் விளக்கம் ஆகியவற்றை வெளிப்படுத்தத் தேவையில்லை (பந்தி 120 ஐப் பார்க்கவும்)

C6 உரிமம் பயன்படுத்தும் C5 இல் உள்ள எந்தவொரு அனுகூலமான நடைமுறை விடயத்துக்கும் உரிமம் அனைத்து அறிக்கையிடல் காலங்களிலும் அனைத்து ஒப்பந்தங்களுக்கும் அதனை நிலைமாறாது பிரயோகிக்க வேண்டும். மேலும் உரிமம் பின்வரும் அனைத்துத் தகவல்களையும் வெளிப்படுத்த வேண்டும்

(a) பயன்படுத்தப்பட்ட அனுகூலமான நடைமுறை விடயங்கள் மற்றும்

(b) நியாயமான சாத்தியமான அளவிற்கு, ஒவ்வொரு அனுகூலமான நடைமுறை விடயத்தையும் பயன்படுத்தும்போது ஏற்படத்தக்க மதிப்பிடத்தக்க தாக்கத்தின் அளவுசார் மதிப்பீடு.

C7 உரிமம் பந்தி C3(b) க்கு அமைவாக முன்பிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் இந்நியமத்தைப் பிரயோகிக்கத் தெரிவு செய்யின், ஆரம்பத்தில் இந்த நியமத்தைப் பிரயோகிப்பதன் விளைவின் திரண்ட தாக்கத்தை, ஆரம்பப் பிரயோகம் உள்ளடங்கலான ஆண்டுக் காலப்பகுதியின் ஆரம்ப கைக்கொள் இலாப மீதியின் மீது (அல்லது பொருத்தமான வகையில் இந்த இடைக்கால வழிமுறையின் கீழ் உரிமம் ஆரம்ப பிரயோகத் திகதியில் நிறைவு செய்யப்படாது காணப்படுகின்ற ஒப்பந்தங்களுக்கு மாத்திரமே அந்நியமத்தை முன்பிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் (உதாரணமாக, 31 திசெம்பரை ஆண்டு முடிவாகக் கொண்ட உரிமத்துக்கு - 2017 ஜனவரி 1 ஆம் திகதி) ஏற்பிசைவு செய்யும் <u>செய்வதற்கான தெரிவினை மேற்கொள்ளலாம்.</u>

C7A <u>பந்தி C3(b) க்கு அமைவாக முன்பிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் *SLFRS 15* நியமத்துக்கான விளக்கவுரைகளைப் பிரயோகிக்கும் உரிமமானது, பின்வருவனவற்றில் ஏதேனும் ஒரு முறையில் பந்தி C5(c) இல் விபரிக்கப்பட்ட நடைமுறை விளக்கங்களைப் பிரயோகிக்கும்:</u>

(a) <u>முன்னிலைப்படுத்தப்பட்ட மிக முந்திய காலப்பகுதியின் ஆரம்பத்துக்கு முன்பான அனைத்து ஒப்பந்தத் திருத்தங்களுக்கும், அல்லது</u>

(b) <u>முதன்முறை பிரயோக திகதிக்கு முன்பான அனைத்து ஒப்பந்தத் திருத்தங்களுக்கும்.</u>

<u>உரிமம் இந்த நடைமுறை விளக்கங்களைப் பிரயோகித்தால், உரிமம் அனைத்து ஒப்பந்தங்களுக்கும் கொள்கை மாறாத அடிப்படையில் பிரயோகிப்பதுடன், பந்தி C6 இனால் தேவைப்படுத்தப்படும் தகவல்களை வெளிப்படுத்துதல் வேண்டும்.</u>

…

<u>C8A உரிமம் LKAS 8 நியமத்துக்கு இணக்கமான முறையில் முன்பிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் *SLFRS 15* நியமத்துக்கான விளக்கவுரைகளைப் பிரயோகிக்கும் (பந்தி C1B இனைப் பார்வையிடுக). முன்பிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் இத்திருத்தங்களை பிரயோகிக்கும் போது, உரிமமானது *SLFRS 15* நியமத்தின் ஆரம்ப பிரயோகத்தின் போதே இவை உள்ளடக்கப்பட்டு இருந்ததாக கருத்திற் கொள்ளும்வகையில் பிரயோகிக்க வேண்டும். அதன் விளைவாக, உரிமம் பந்திகள் C2–C8 க்கு அமைவாக SLFRS 15 நியமம் பிரயோகிக்கப்படாத அறிக்கையிடல் காலங்கள் அல்லது ஒப்பந்தங்களுக்கு இத்திருத்தங்களை பிரயோகிக்கமாட்டாது. உதாரணமாக, பந்தி C3(b) க்கு அமைவாக உரிமம் நியமத்தினை ஆரம்பப் பிரயோகத் திகதியில் பூர்த்தி அடையாது காணப்படும் ஒப்பந்தங்களுக்கு மாத்திரம் பிரயோகிக்கின்றது எனின் அறிக்கையிடல் திகதியில் பூர்த்தி செய்யப்பட்டு காணப்படும் ஒப்பந்தங்களை இத்திருத்தங்களுக்கு அமைவாக SLFRS 15 நியமத்தின் ஆரம்ப பிரயோகத் திகதியில் மீள்கூற்று செய்ய வேண்டியதில்லை</u>

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.